ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு




ஜூலை - 2014

40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**ஜூன் - 2014**

மலர் - 46 இதழ் - 06



• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்



• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு ................ 01
இறைவனடி சேர்ந்தார் ................ 02
திருத்தந்தையைச் சந்திக்க .......... 03
வரலாற்றில் மனித உரிமை ......... 05
எண்ணிப்பார்க்கையில் ................ 07
கடுகுக் கதை ................................ 08
தீர்க்க தரிசனங்களின் நிலம் ...... 09
மாணவர் பக்கம் .......................... 10
தொடர்பு சாதனங்களும் .............. 12
தொண்டனின் சில நிமிடங் ......... 15
இயேசுவின் அன்பை ................... 17
வீட்டு மருத்துவம் ........................ 18
அல் அக்சா மசூதி ......................... 19
தொகைநிலைப் பெயர்கள் .......... 20
தீர்ப்பு ........................................... 21
சின்னான் குறும்பட வெளியீடு ..... 23
புனிதர்களை அறிவோம் ............ 25
விவிலியம் கற்போம் .................... 27
அறிவை வளர்ப்போம் ................. 28



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு .....

**"மதங்கள் பிறந்தது மனித குலத்தைப் பிரிப்பதற்காக அன்று, அன்பு சார்ந்த பண்புகளை ஒவ்வொருவர் இதய நிலத்திலும் விதைப்பதற்காகவே"**

என சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். இன்று மதத்தின் பெயரை வைத்துக்கொண்டு மதம் பிடித்து அலையும் பல அமைப்புகளை நம் நாட்டிலே காணக்கூடியதாக இருக்கின்றது. மதம் என்பது அன்பையே சிந்தித்து, அன்பையே மூச்சுக் காற்றாக சுவாசித்து மனிதம் வளர்ப்பதுதான். ஆனால் இன்றோ, அவையனைத்தும் மறைந்து மனித உயிர்களைக் காவுகொள்ளும் ஆயுதமாக மதத்தை வைத்துக்கொண்டுள்ள மதவாதிகளின் போக்கு காணப்படுகின்றது. எந்த மதமும் உலகிற்கு எந்தத் தீங்கையும் சொல்லித் தரவில்லை. எல்லாத் தளைகளிருந்தும் விடுபட்டு, உண்மையான சுதந்திர வாழ்க்கையை வாழ்வதற்கான வழிமுறைகளைத் தான் எல்லா மதங்களும் சொல்ல முற்படுகின்றன.

**வாழ்வை இனிதாக்குவது அன்பு**
**வாழ்க்கையை சுவையாக்குவது அன்பு**
**தடுமாற்றத்தை அமைதியாக்குவது அன்பு**
**நம்பிக்கையை விடச் சிறந்தது அன்பு**
**இமயத்தைத் தொடவைப்பது அன்பு**
**இறைவனை அடைய வைப்பது அன்பு.**

எல்லா மதங்களும் போதிப்பது இவற்றைத்தான். ஆனால், இவையனைத்தும் மதவாதிகளின் அர்த்தமற்ற போக்கினால் அழிந்துவிட்டன.

**"மனிதன் தனக்குள் இருக்கும் இறைத்தன்மையை உணர்வதற்கான வாய்ப்பளிக்க அவனை உள்நோக்கி அடியெடுத்து வைப்பதற்காகவே மதங்கள் உருவாக்கப்பட்டன. தெருவில் கூவி விற்பதற்காக அல்ல, எண்ணிக்கையைக் கூட்டிக் காட்டவேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் துணியும் மூர்க்கத்தனத்திற்குப் பெயர் மதமல்ல"**

என ஜக்கி வாசுதேவ் கூறுகிறார்.

மதம் என்பது பின்பற்றுதலுக்குரியது மட்டுமே! பிரச்சாரத்திற்குரியது அல்ல. மதம் பிரச்சாரம் வடிவம் பெறின் பெரும் பூசல்களே உருவாகிவிடும். ஆம், அது இன்று உண்மையாகிக்கொண்டு இருக்கின்றது. இனவாதப்போர் முடிவுக்கு வந்தாலும், மதவாதிகளின் கபளிகரமான சூழ்ச்சித்தன்மை தொடர்ந்தவண்ணமே இருக்கின்றது. ஆலயங்களை அழித்தல், கோவில்களை இடித்தல், பள்ளிவாசல்கள் பதம்பார்க்கப்படும் நிலைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இது அரசியல் நாடகமா? அல்லது அரசாங்கத்தின் பெரும்பான்மை மதத்திற்கான பிரச்சாரமா....?

**இன்று அரசியல்வாதிகளின் தேசிய விளையாட்டு மதமாகிவிட்டது.** இப்பொழுது மதங்கள் எங்கே இருக்கின்றன? **மதங்களின் பெயரால் நடத்தப்படும் கட்சிகளில்தானே இருக்கின்றன.** எமது நாட்டில் மட்டுமல்ல, உலக அரங்கிலே மதத்தின் பெயரை வைத்துக் கொண்டு நாடுகள் அழிவுப் பாதைக்குச் செல்கின்றன.

**"உலகப் போர்களைவிட மனித இரத்தம் மண்ணில் அதிகமாக ஓடுவது, மதப்போர்களினால்தான்"**

என 'தமிழருவி' மணியன் கூறுகின்றார்.

**"கதியற்றவருக்குத் தொண்டுசெய்வதுதான் கடவுளுக்குச் செய்யும் வழிபாடு. மனிதனும் கடவுளும் வேறு வேறல்ல... மனிதனை ஒதுக்கிவிட்டு கடவுளை மட்டும் காட்டினால் அது மதமல்ல"**

எனவே, ஒரு தாய் மக்களாக நம் நாட்டில் சுதந்திரத்துடனும் நீதியுடனும் எம் ஒவ்வொருவருடைய உரிமைகளையும் சுவாசிக்க நாட்டுத் தலைவர்கள் மக்களுக்குரிய கடமையைச் செய்ய வேண்டும்.

**"தன் மதம் மட்டுமே வாழவேண்டும், பிற மதங்கள் அழியவேண்டுமெனக் கனவு காண்பவனுக்காக நான் உளமார வருந்துகிறேன்"**

என சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். எனவே, இந்நாட்டிலே அனைத்து மதங்களும் ஒன்றுபட்டு சமாதானத்தைக் கட்டியெழுப்பும் கருவிகளாகத் திகழ பிரார்த்திப்போம்.

**"தூய தந்தையே நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்"**

**- யோவான் 17:11 -**

❑ ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவனடி சேர்ந்தார் கர்தினால் சைமன் லூர்துசாமி

தமிழ் நாட்டைச் சேர்ந்த கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்கள் கடந்த 02.06.2014 அன்று இறையடி சேர்ந்தார்.

புதுச்சேரி அருகே உள்ள கல்லேரி என்னும் ஊரில் 1924ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ம் திகதி பிறந்த இவர் திண்டிவனத்திலும் கடலூரிலும் ஆரம்ப, உயர்நிலைப் படிப்புகளை முடித்தபின் பெங்களூரு புனித பேதுரு இறையியல் கல்லூரியில் மெய்யியலும் இறையியலும் பயின்றார். 1951ம் ஆண்டு டிசம்பர் 21ம் நாள் புதுச்சேரி – கடலூர் உயர் மறைமாவட்டத்தின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.


அறிவும் ஆற்றலும் பணிச் சிறப்பும் பொருந்திய இவர் வத்திக்கான் திருப்பீடத்தில் நற்செய்தி அறிவிப்புப் பணி பேராயத்தின் செயலராக 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்.

1985ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி கர்தினாலாக நியமனம் பெற்று கீழை வழிபாட்டு முறைப் பேராயத்தின் தலைவராக 7 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றார். தமிழரான ஒரே கர்தினால் இவராவார்.

இறையடி சேர்ந்த கர்தினால் அவர்களின் உடல் இரண்டு நாட்கள் மக்களின் அஞ்சலிக்காக புனித ஸ்தேவான் சிற்றாலயத்தில் வைக்கப்பட்டிருந்தது.


பின்பு கர்தினால் குழுவின் தலைவரான கர்தினால் ஆஞ்சலோ சொடானோ அவர்கள் ஒப்புக்கொடுத்த திருப்பலியில் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் கலந்து இறுதிச் செபங்களைக் கூறி ஆசீர்வதித்தார்.

திருப்பலியினை ஒப்புக்கொடுத்த கர்தினால் அவர்கள் இறைவனடி எய்தியுள்ள கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்கள் நோயினால் நீண்டகாலம் வேதனை அனுபவித்தாலும், அவர் தனது செபத்தாலும், துன்பத்தாலும் திரு அவைக்குத் தொடர்ந்து பணி செய்தார் எனப் பாராட்டினார். அத்துடன் உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன் என்றுரைத்த தூய பவுல் அடிகளாரின் வார்த்தைகளை அடிக்கடி உச்சரித்த கர்தினால் லூர்த்துசாமி அவர்களின் ஆன்மா நிறை சாந்தியடைய நாம் அனைவரும் செபிப்போமெனவும் உரைத்தார்.



அதன்பின்னர் அவரது உடல் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டு புதுச்சேரி கடலூர் உயர் மறைமாவட்டத்தின் பேராலயத்தில் ஜூன் 09ம் திகதி இறுதி அடக்கத் திருப்பலியும், அடக்கச் சடங்குகளும் நடைபெற்றன. இவர் பெப்ரவரி 05ம் திகதி தனது 90 வயதை நிறைவுசெய்தார்.

கர்தினால் லூர்த்துசாமி ஆண்டகையின் மறைவை அடுத்து திருஅவையில் கர்தினால்களின் எண்ணிக்கை 214 ஆகக் குறைந்துள்ளது.



இந்திய இறையியலாளரும் பண்பாட்டு மயமாக்கலில் தீவிரமாக உழைத்தவரும் இந்திய தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனராகவும் பணிபுரிந்த காலஞ்சென்ற அருள்தந்தை அமலோற்பவதாஸ் அவர்களின் மூத்த சகோதரரே காலஞ்சென்ற கர்தினால் லூர்த்துசாமி அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜே. எச். இரத்தினராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வத்திக்கான் சென்று திரும்பிய

# திருத்தந்தையைச் சந்திக்க மட்டக்களப்பு ஆயருடன் ஒரு நேர்முகம்...



"சமத்துவம், நீதி நிலவாதவரை வன்முறைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாது" என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

அட்லிமினா - சந்திப்பிற்காக திருத்தந்தையைச் சந்திக்க நமது மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள் தந்தை யோசப் பொன்னையா அவர்களுட்பட இலங்கையின் 14 ஆயர்கள் வத்திக்கான் சென்றிருந்தனர். மே 03ம் திகதி இவர்கள் திருத்தந்தையைச் சந்தித்து உரையாடினர்.

திருத்தந்தையைச் சந்தித்துத் திரும்பிய ஆயர் அவர்களிடம் அட்லிமினா சந்திப்புப்பற்றி உரையாடினோம்.

**"நாங்கள் மனித குலத்தின் மத்தியில் புளிக்காரமாகச் செயற்பட்டு கடவுளின் மீட்பை உலகத்தில் பறைசாற்ற வேண்டும்"**



"வழமையாக, ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் இச்சந்திப்பு இம்முறை எட்டு ஆண்டுகளுக்குப் பின்பே இடம்பெற்றுள்ளது. திருத்தந்தை அவர்களுக்கு அதிகரித்துள்ள பல்வேறு வேலைகள், சந்திப்புகள் காரணமாகவே காலம் நீடிக்கப்பட்டுள்ளது" என்று கூறிய ஆயர் அவர்களிடம் ,

புதிய மறைமாவட்டத்தின் புதிய ஆயர் என்ற வகையில் புதிய திருத்தந்தையை முதன் முதலாக சந்தித்த போது இருந்த மனநிலையைக் கேட்டபோது,

"அவரது எளிமையும், எப்போதும் சிரித்த முகமும் தம்மை மிகவும் கவர்ந்ததாகக் குறிப்பிட்டார். இலங்கை ஆயர்கள் அனைவரையும் ஒருங்கே சந்தித்த திருத்தந்தை ஒவ்வோர் ஆயரும் தமது மறைமாவட்டம் பற்றிக் கூறிய அனைத்தையும் கேட்டார்.




திருத்தந்தை, இலங்கை ஆயர்களுக்கு வழங்கிய செய்தியில் பல்வேறு விடயங்களைச் சுட்டிக் காட்டியிருந்தார். அவர் இலங்கையில் நடைபெற்ற அண்மைக்கால நிகழ்வுகள் அனைத்தையும் மிக நன்றாகவே தெரிந்துள்ளார் என்பது புரிந்தது.

"நாங்கள் மனித குலத்தின் மத்தியில் புளிக்காரமாகச் செயற்பட்டு கடவுளின் மீட்பை உலகத்தில் பறைசாற்ற வேண்டும்" என்று கூறிய அவர், "இலங்கையில் இத்தகைய புளிக்காரமாகச் செயற்பட வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டார். குறிப்பாகப் போரினால் ஏற்பட்ட மோதல்களும், உயிரிழப்பும் முடிவுக்கு வந்துள்ள இக்காலத்தில் புளிக்காரமாகச் செயற்பட்டு நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்பவேண்டும்" என்றார். மேலும் திருத்தந்தை, "எல்லா மக்களுடைய மனித உரிமைகளையும் மதித்து நடப்பதும் இன முரண்பாடுகளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

னின்று விடுதலை பெற உழைப்பதும் முக்கியமானதாகும். ஒற்றுமையைக் கட்டியெழுப்பவும் காயங்களை ஆற்றவும் ஒன்றுபட்ட சமூகமாக உழைக்க வேண்டும். இலங்கைத் திருச்சபையானது தன்னகத்தே சிங்கள, தமிழ்ச் சகோதரர்களைக் கொண்டிருப்பது ஒற்றுமையை நம்பிக்கை அடித்தளத்தில் கட்டி எழுப்புவதற்கான ஆசீர்வாதமாக அமைகின்றது. ஈர் இனங்களும் ஒன்றாக வாழ்வதற்கும் கற்பதற்கும் உழைக்கவும், வழிபடவும் கூடும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும்" என்றார்.



மீள் அபிவிருத்திக்கு உதவும் பிறரன்புப் பணிகளை கிறிஸ்துவின் இரக்கத்தின் திருமுகத்தை வெளிப்படுத்துகின்றது என வர்ணித்த திருத்தந்தை, இலங்கைத் திருச்சபை 2004ம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போதும் போருக்குப் பின்பும் நல்லிணக்கத்துக்கும், மீள்கட்டுமானத்துக்கும் ஆற்றிவரும் பணிகளையிட்டு பாராட்டுத் தெரிவித்தார்.

மேலும் அவர், இலங்கையில் பல்வேறு இனங்களும் மதப் பாரம்பரியங்களும் இருப்பதால் இரு மதங்களுக்கிடையிலான உரையாடல்களுக்கும், கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான உரையாடல்களுக்கும் மிகுந்த வாய்ப்புள்ளது. இந்தத் துறையில் உங்கள் செயற்பாடுகள் பாராட்டுக்குரியது என்று கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில், மதத் தீவிரவாதம் பற்றியும் குறிப்பிட்டார்.

மதத் தீவிரவாதிகள் ஒரு போலியான தேசிய ஒற்றுமையை ஒரு தனிப்பட்ட மத அடையாளத்தை வைத்து வளர்ப்பதனால் முரண்பாடுகளும், அச்சுறுத்தல்களும் தலைதூக்கியுள்ளன. இதனால் மதங்களுக்கான உரையாடல்களுக்கும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையானது நீதிக்கும் சமாதானத்திற்கும் நல்மனங்கொண்டவர்களோடு தொடர்ந்து உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அத்துடன் குருக்களுடைய பிரமாணிக்கமுள்ள பணிக்காகவும், சாட்சிய வாழ்வுக்காகவும் நன்றி கூறிய அவர், உடனுழைப்பாளிகளாகச் செயற்படும் இறைமக்களுக்கும் நன்றி கூறினார். இறைமக்களின் கொடைகளை இனங்கண்டு, ஊக்கப்படுத்தி அவற்றைத் திருச்சபையின் பணிகளுக்குப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு திருத்தந்தை தமக்கு வழங்கிய செய்தியில் பல பயனுள்ள விடயங்களைக் கூறிச் சென்ற நமது ஆயரிடம்,

“தொடர்ந்து இலங்கையில் அதிகரித்துவரும் மதத் தீவிரவாதத்தையும், சிறுபான்மையினருக்கான ஒடுக்குமுறைகளையும் அண்மைய அளுத்கம, பேருவளை, தர்ஹாநகர் போன்ற இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளையும் பார்க்கும்போது எதிர்காலத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்....?”

என்று கேட்டோம்.

“எதிர்காலம் பயங்கரமாகவே உள்ளது, திருத்தந்தை கூறியதுபோல் இலங்கையின் பல்லின, பல்மதத் தன்மையை ஏற்றுக்கொள்ளாத மதத் தீவிரவாதிகளின் செயல் இது. திட்டமிட்டு ஓர் அரசியல் ஒழுங்கில் இவை நடைபெறுகின்றன. இவற்றுக்குப் பின்னால் பலமான கரங்கள் இருப்பது தெளிவாகின்றது. ஆயினும், நல்லிணக்கத்திற்கும், ஒற்றுமைக்கும் நம்பிக்கையோடு உழைப்பதுவே நமது கடமையாகும். அனைவரும் தமது மௌனங்களைக் கலைத்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

**தமது அதிகரித்த வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி நம்மோடு கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட நமது ஆயருக்கு நெஞ்சார்ந்த நன்றி கூறுகின்றோம்.**


**- மலர்வேந்தன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## முதலாவது ஜெனிவா மகாநாடு (1864)



(1864இல் போரில் காயமுற்ற போர் வீரர் மட்டில் அக்கறை காட்டும்படியாக உருவாக்கப்பட்ட முதலாவது ஜெனிவா மகாநாட்டு பிரகடனத்தின் மூலப்பிரதி இதுவாகும்)

1864இல், ஜெனிவா குழுவின் ஏற்பாட்டின் பேரில் சுவிஸ் சமஷ்டிக் கவுன்சிலின் அழைப்பையேற்று 16 ஐரோப்பிய நாடுகளும், பல அமெரிக்க மாநிலங்களும் ஜெனிவாவில் ஒரு மகா நாட்டில் பங்கேற்றுக் கொண்டன. போர்க்களங்களில் காயப்படும் போர் வீரர்களின் மருத்துவ ஏற்பாட்டுக்காக ஒரு பொது வேலைத் திட்டத்தை உருவாக்கும் நோக்குடனேயே இந்த மகாநாடு கூட்டப்பட்டிருந்தது.

இந்த மகா நாட்டில் உருவாக்கப்பட்ட பொதுக் கோட்பாடுகள், பின்வந்த ஜெனிவா ஒப்பந்தங்களில் பேணப்பட்டவாறு, காயப்பட்ட அல்லது நோயுற்ற போர் வீரர்களுக்கு எந்தவித பாகுபாடும் இன்றி கவனம் செலுத்தப்படவேண்டும். அத்துடன், மருத்துவ ஆளணி மற்றும் மருந்து வகைகளானவை வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பினால் சிலுவைக் குறியிட்ட அடையாளம் பதிக்கப்பட்ட வாகனங்களிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு அனைத்துத் தரப்பாரும் மதிப்பளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நின்றது.

## ஐக்கிய நாடுகள் (1945)



1945ஆம் ஆண்டில் உலகின் ஐம்பது நாடுகள் அமெரிக்காவின் சன்பிரன்சிஸ்கோ மாநகரில் ஒன்று கூடி உலகில் சமாதானத்தைப் பாதுகாக்கவும், முன்னெடுத்துச் செல்லவும் ஐக்கிய நடுகள் தாபனத்தை நிறுவின.

இரண்டாவது உலக மகா யுத்தமானது 1939 முதல் 1945 வரை கோரத் தாண்டவமாடி நின்ற கால கட்டம்! ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களின் பற்பல நகரங்கள் போரினால் சிதிலமடைந்து போயின. கோடிக்கணக்கான மக்கள் மாண்டனர், இன்னும் பலகோடி மக்கள் ஏதிலிகளாயினர், வீடுவாசல் அற்றவராகினர்; பட்டினியால் வாடினர். ஜேர்மனியில் குண்டுகளால் நாசமாக்கப்பட்ட பேர்லின் நகர எதிர்ப் புகளை முறியடித்துக் கொண்டு ரஷ்யா முழு வேகத்துடன் முன்னேறிக்கொண்டிருந்தது. பசுபிக்

மனித உரிமைகள் ஆண்டு

ஆனந்தா ஏ.ஜி. இராஜேந்திரம்

தொடர் 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிராந்தியத்தில் அமெரிக்க மரைன் படைகள் பதுங்கு குழிகளுக்குள் இருந்தபடி ஒக்கினாவா போன்ற தீவுகளில் போர் புரிந்த ஜப்பானியர்களுக்கெதிராக சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

1945 ஏப்ரில் மாதத்தில் ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் சன்பிரன்சிஸ்கோவில் நம்பிக்கையுடனும், நல்லது நடக்கும் என்ற மனநிலையுடனும் கூடினர். சர்வதேச அமைப்புகளின் ஐக்கிய நாடுகள் மகாநாடானது, சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லவும் எதிர்காலத்தில் யுத்தங்கள் நடைபெறாது தடுக்கவும் ஒரு சர்வதேச அமைப்பை வடிவமைக்கும் நோக்கினை மையமாகக் கொண்டிருந்தது.

இந்த நிறுவனத்தின் எண்ணக்கரு அதன் முன்மொழியப்பட்ட பட்டயத்தில் தெளிவாக்கப்பட்டிருந்தது. அது, "எமது வாழ்வுக் காலத்துக்குள்ளேயே மனித வர்க்கத்திற்குச் சொல்லொணாத் துன்பத்தைத் தந்துநின்ற யுத்தத்தின் கோரப்பிடியிலிருந்து எம்மைத் தொடரவிருக்கும் தலைமுறையினரைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மக்கள் நாம் உறுதி கொண்டுள்ளோம்".

புதிதாக உருவாகிய ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பட்டயமானது, 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24ந் திகதி அமுலுக்கு வந்ததுடன், அத்தினம் வருடாந்தம் 'ஐக்கிய நாடுகள் தின'மாகச் சிறப்பிக்கப்பட்டும் வருகிறது.

## மனித உரிமைகள் தொடர்பான சருவதேச பிரகடனம் 1948




மனித உரிமைகள் தொடர்பான சருவதேச பிரகடனம் அநேக எண்ணிக்கையிலான மனித உரிமைச் சட்டங்களையும், ஒப்பந்தங்களையும் உலகளாவிய ரீதியில் உருவாக்க அடித்தளமாக இருந்திருக்கிறது.

1948ஆம் ஆண்டு வாக்கில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் புதிய மனித உரிமைகள் ஆணைக்குழு உலகின் கவனத்தைத் தன்பால் ஈர்த்துக்கொண்டது. ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க பிரதிநிதியாக அமைந்த, அமெரிக்க அதிபராகவிருந்த பிராங்லின் ரூஸ்வெல்ட்டின் விதவை மனைவி எலேனோர் ரூஸ்வெல்ட் அம்மையாரின் (இவரே தன் மண்ணின்மனித உரிமைப் போராட்டங்களின் முன்னோடி) செயற்திறன்மிக்க தலைமைத்துவத்தின் கீழ், ஆணைக்குழுவானது மனித உரிமைகளுக்கான சருவதேச கொள்கைத் திரட்டொன்றை வடிவமைக்க முனைந்தது. அதனுடைய உத்வேகத்தினால் தூண்டப்பட்ட எலேனோர் அம்மையார், இந்தப் பிரகடனத்தை மனித வர்க்கத்தின் சருவதேச "மக்னா கர்ட்டா" எனக் குறிப்பிட்டார். இந்தப் பிரகடனம் 1948 டிசெம்பர் 10ந் திகதி ஐக்கிய நாடுகள் தாபனத்தால் ஏற்கப்பட்டது.

சரித்திரத்தில் முதற்தடவையாக, தங்களால் இயன்ற அளவு, இந்த முப்பது சரத்துகளைக் கொண்ட பிரகடனம் செயற்படுவதை உறுதிப்படுத்த தீர்மானம் மேற்கொண்டனர், அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகள். அன்று அவர்கள் ஒரே பிரகடனமாக மாற்றியமைத்த அந்த சாசனத்தில் முதலாவத சரத்தில் "....எல்லா மனித உயிர்களும் சுதந்திரமானவர்களாகவும், மனித மாண்பிலும், உரிமைகளிலும் சமத்துவம் கொண்டவர்களாகவும் அமைகின்றனர்" என்று அறிக்கையிடப்படுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ தேசங்கள் பல இம் முப்பது சரத்துகளும் சகலராலும் அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்த சங்கற்பம் பூண்டன. இதன் தொடர்ந்தேர்ச்சியாக, இந்த உரிமைகளில் பல, பல வடிவங்களில் ஜனநாயக நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களின் பாகமாக அமைகின்றன என்றால் அது மிகையாகாது.

## முப்பது மனித உரிமைகளும் எவை?

மிகச் சுருக்கமாகவும், எளிமையாகவும் ஒவ்வொரு சரத்துகளையும் நாம் பார்க்கலாம்:

1. **நாம் அனைவரும் சுதந்திரமாகவும், சமமானவர்களாகவும் பிறந்துள்ளோம்.** நாம் சுதந்திரப் பிறவிகள்; எங்களுக்கென்று தனித்துவமான சிந்தனைகளும், எண்ணங்களும் உள்ளன. நாம் அனைவரும் ஒரே மாதிரியாக நடத்தப்படவேண்டும்.
2. **பாகுபாடு காட்ட வேண்டாம்.** எங்களுக்குள் எந்த வேறுபாடுகள் இருந்தாலும் இந்த உரிமைகள் அனைவருக்கும் உரித்தானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணிப்பார்க்கையில்..... 07

ஒரு மனிதனின் வாழ்வு என்றும்
அடுத்தவர்க்குப் பாடமாக அமைவது
உண்டு.
இதனால் அடுத்தவனைப் பார்த்துத் தம்
வாழ்வைத் திருத்திக் கொள்பவர்கள்
நிறைய உண்டு!
இப்படியாகத் தம் வாழ்வைத்
திருத்த விழைகின்றவர்க்கு உதவியாக
நம் வாழ்வைத் திறந்த புத்தகமாக
வைப்பது



மேலானதான ஒரு செயலாக
இருக்கின்றது.
ஆனாலும் நம் வாழ்வை
எல்லோருக்கும் தெரிந்த புத்தகமாக
மாற்றியமைப்பது
சில சமயங்களில் தவறியும் விடுகின்றது!
ஆழமாக எண்ணிப் பார்க்கையில்..
ஒரு சிலர் தான் அடுத்தவர்
வாழ்வைப் படிப்பதன் மூலம்
தம் வாழ்வில் மாற்றம் காண்கிறார்கள்.
இன்னும் பலரோ வெறும்
விடுப்புக்காகவே அடுத்தவர் வாழ்வை
உற்று நோக்குகிறார்கள் என்பது புரிகிறது!

ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்

*

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பிரித்தானிய எலிசபெத் மகாராணியார் சந்தித்தார். கடந்த ஏப்ரல் மாதம் 3ம் திகதி வத்திக்கானுக்கு விஜயம் செய்த எலிசபெத் மகாராணியாரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கைலாகு கொடுத்து வரவேற்றார்.**

**திருத்தந்தை அவர்கள் எலிசபெத் மகாராணியாரைச் சந்தித்தது இதுவே முதல் தடவையாகும். அத்துடன் எலிசபெத் மகாராணியார் 2011ம் ஆண்டுக்குப் பின் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுச் சுற்றுலாவாகவும் இது அமைந்திருந்தது.**



3. **வாழும் உரிமை.** எங்களுக்கு உயிர் வாழும் உரிமையுண்டு; சுதந்திரமாகவும், பாதகாப்பாகவும் வாழுகின்ற உரிமையது.

4. **அடிமைத்தனம் இல்லை.** எங்களை அடிமைகளாக்க யாருக்கும் அதிகார மில்லை. எம்மாலும் யாரையும் எமக்கு அடிமைகளாக்க முடியாது.

5. **சித்திரவதை இல்லை.** யாருக்கும் எங்களைப் பாதிக்கவோ, சித்திரவதை பண்ணவோ உரிமை கிடையாது.

6. **எங்கு சென்றபோதும் எங்கள் உரிமை மாறாது.** உங்களைப் போலவே நானும் ஓர் ஆள்.

7. **சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம்.** சட்டமானது அனைவருக்கும் ஒன்றேதான். அது நம் அனைவரையும் நீதியாக நடத்த வேண்டும்.

8. **உங்களது மனித உரிமை, சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது:** நாம் நீதியாக நடத்தப்படாவிட்டால் எமக்கு உதவும்படி சட்டத்தைக் கோர முடியும்.

9. **நீதியற்ற தடுப்புக்காவல்:** தகுந்த காரணங்களின்றி எவராலும் எம்மை சிறையிட முடியாது அல்லது தடுத்து வைக்கவும் முடியாது. அல்லாதுபோனால், எம்மை எமது நாட்டினின்று எங்கும் நாடு கடத்திவிடவும் முடியாது.

10. **விசாரணைக்குரிய உரிமை:** எம்மை விசாரணைக்குட்படுத்துவதாயின் அதைப் பகிரங்கமாகச் செய்யவேண்டும். எம்மை விசாரிப்பவர்களுக்கு வேறு யாரும் என்ன செய்ய வேண்டும் என்று கூறிவைக்க முடியாது.

11. **குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரைக்கும் நாம் அப்பாவிகளே:** ஒன்று நிரூபிக்கப்படும்வரையிலும் யாரும் எதையும் செய்ததாகக் குற்றங் கூற முடியாது. யாரும் நாம் தவறு செய்தோம் என்று குறை சொல்லும்போது அது பிழை என்று நிரூபிக்கும் உரிமை எமக்குண்டு.

– தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அன்ரன் தனது இளைய மகனுடன் செவ்வாய்க்கிழமைகளில் புளியந்தீவு அந்தோனியார் கோவிலுக்குச் செல்வதுண்டு. அன்ரனின் இளையமகன் பாலர் பாடசாலையில் படிக்கின்றான்; நல்ல துடியன். அப்பையனுக்கு நெற்றியில் 'உண்ணி' வந்து, பெரியாஸ்பத்திரி தோற் சிகிச்சைப் பிரிவில் பல தடவைகள் 'சுட்டும்' சரிவரவில்லை. கடைசியில் பக்கத்துவீட்டு ஆச்சியின் ஆலோசனைப்படி அந்தோனியாருக்கு மிளகும், உப்பும் வைத்து செவ்வாய்க்கிழமைகளில் வேண்டுதல் செய்த பிற்பாடு, உண்மையிலேயே 'உண்ணிகள்' கழன்றுவிட்டன. அப்படியே தகப்பனுக்கும் மகனுக்கும் செவ்வாய்க்கிழமைகளில் அந்தோனியாரிடம் செல்லும் பழக்கம் வந்துவிட்டது.

அன்றுமோர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆறு மணியிருக்கும், அடுத்தநாள் காலைச் சாப்பாட்டிற்கு 'சன்வீச்' செய்வதற்காக சன்வீச் பாண்கள் இரண்டை வாங்கி எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் கொழுவி வைத்துவிட்டு அன்ரனும் மகனும் கோவிலுக்குள் சென்று மெழுகுதிரி கொழுத்தி வழிபாடு செய்துவிட்டு வெளியில் வந்தபோது, அன்ரனின் நண்பன் பாஸ்கரன் வந்து அன்ரனுடன் கதைத்துக்கொண்டிருந்தார். இதற்கிடையில் அன்ரனின் மகன் மோட்டார் சைக்கிளுக்குக் கிட்ட சென்றுவிட்டான்.

அன்ரன் மீண்டும் மோட்டார் சைக்கிளுக்குக் கிட்ட வந்தபோது, 'பாண்' பேக்கைக் காணவில்லை.

"தம்பி பாண் பேக் எங்க?"

"அப்போய் அத எடுத்து கோயிலுக்க வந்த ஆக்களுக்கு கொடுத்திட்டன். கோயில்ல பாண் துண்டு, பணிஸ், புக்க, அப்பம் எல்லாம் குடுக்கிறதுதானே....?"

அன்ரன் அப்போதுதான் அவதானித்தார்: பக்தர்களின் கைகளில் 'சன்வீச்' பாண் துண்டுகள். அவருக்கு மகனுக்கு ஏசுவதா, பேசாமல் விடுவதா என்று விளங்கவில்லை. அதையும் பார்க்கப் பெரும் பிரச்சினை, பேக்கரியில் பாண் இருக்குமா? இருக்காதா? என்ற சிக்கல்.

அன்ரன் அந்தோனியார் சுரூபத்தை எட்டிப் பார்த்தார்.....▲

## புனித சம்மனசுகளின் இராக்கினி அன்னை பிரசீடியத்தின் 2000ம் கூட்ட நிறைவு



தாண்டவன்வெளி புனித காணிக்கை அன்னை ஆலயப் பங்கில் புனித சம்மனசுகளின் இராக்கினி அன்னை பிரசீடியத்தின் 2000ம் கூட்ட நிறைவினையொட்டி சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.


கடந்த 7ம் திகதி சனிக்கிழமை காலை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்கள் தலைமையில் கூட்டுத் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புச் செய்திகள், வாழ்த்துரைகள், பரிசுகள், விருதுகள் வழங்கள் என்பன நடைபெற்றதோடு "வைகறை" என்னும் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இறுதியாக அனைவருக்கும் வழங்கப்பட்ட காலை விருந்துடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்க தரிசனங்களின் நிலம்

பயணக் கட்டுரை 06



யோர்தான் சமவெளியானது, கிழக்காபிரிக்காவிலிருந்து தூர ஆசியாவரை நீண்டு செல்லுமோர் பாரிய நிலப்பரப்பு. அந்தப் பகுதியினூடாகத்தான் பாலஸ்தீனத்துக்குட்பட்ட ஜெரிக்கோ நகரும் அமைந்துள்ளது.

துப்பாக்கி ரவைகள் பதம் பார்த்த கட்டிடங்கள், சிதைந்துபோன போராளிகளின் பங்கர்கள், தலையிழந்த பேரீச்சை மரங்களென ஒரு நீண்ட இடைவெளிக்கு இதே காட்சிதான். நம்மவர்கள் "பனைவடலிக் காவியம்' பாடியதுபோல் பாலஸ்தீனக் கவிஞர்கள் யாராவது "பேரீச்சைக் காவியம்' நிச்சயம் பாடியிருப்பார்கள்.

இங்குதான் முதன் முதலில் பலஸ்தீனப் பெண்களைக் கண்டேன். செம்மறி ஆடுகளை வெங்கார வெய்யிலில் நின்று மேய்த்துக்கொண்டிருந்த அவர்களது முகங்கள் நித்திய வறுமையின் கோடுகளால் வரையப்பட்டிருந்தன. சங்ககாலப் பதிப்புகளில் காணப்படும் 'பாண் மகளிர்' என்கின்ற பாடினிகளாகவோ, அன்றில் உளக் குறிப்புப் பற்றி உடலின் வேறுபாடுகளால் உணர்த்தும் 'விறலி' களாகவோ அவர்கள் தோணவில்லையெனக்கு.

அவர்களின் முகங்களில் கோடிட்டிருந்த இறுக்கம், எங்குமே தரிசிக்கவொண்ணாதவை. நானங்கு தரிசித்ததோ ஆக்கிரமிப்புப் போரின் மற்றொரு சருவதேச முகத்தைத்தான். யூத பூமியின் நிகழ்வுகளின் வர்த்தமானங்கள் மிகத் தெளிவானவை. அரைவேக்காட்டு உண்மைகளைவிட, அப்பட்டமான பொய்களே மேலானவை.


சமூக விசாரணைக்குள் நானென்னை வகைப்படுத்துபவனாகையால்தான் எனக்கிந்த அக்கறைகளோ தெரியாது. யூதப் படுதாவில் வரையப்பட்டிருந்த இந்த அகோரக் காட்சிகள், அதன் ஆக்கத்துக்குத் தகர்வும், அதிர்வும் ஆகுமானவையென்பதை நிரூபிக்கிறதாகவே எனக்குப் படுகிறது. இன சங்காரம் நமக்கொன்றும் புதிதானதல்ல.

இந்த வழியால்தான் எனது சாக்கடலை நோக்கிய பயணமே! கடல் மட்டத்திலிருந்து 420" கீழ் நோக்கி அமைந்த, உலகின் மிகத் தாழ்ந்த நிலப்பகுதிதான் இது. கனியங்கள் காரணமாக அதீத உப்பாயிருந்த இக்கடலில் மனிதர் தாமாகவே மிதந்ததாகவும் வரலாறுண்டு.

11ம் பக் ...... அ. ச. பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அனுராதபுரக் காலத்தில் கிறிஸ்தவர்கள்

கி.மு. 4ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 11ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தினை "அனுராதபுரக் காலம்" என அழைப்பர். இக்காலத்தில் அனுராதபுரமே இலங்கையின் தலைநகராக விளங்கியது. எனவே, இக்காலம் இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. பல குழப்பங்கள், படை எடுப்புகள், உள்நாட்டுப் போர்கள் இடம்பெற்ற காலமாகும். இக்காலகட்டத்திலேயே புத்த மதம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இக்காலத்தில் அனுராதபுரத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல உள்ளன.

பல புராதன நூல்களிலே சில பழங்கதைகளின்படி கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்திலே நற்செய்தி இலங்கையிலே போதிக்கப்பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டன. அதாவது, அப்போஸ்தலர் காலத்திலேயே, புதிய ஏற்பாட்டு நூல்களில் போதிக்கப்பட்டிருக்கும் நபர்களினால் நற்செய்தி இலங்கையில் போதிக்கப்பட்டிருக்கிறது. இயேசுவைக் காணப் பெத்லகேமுக்கு வந்த கீழைத்தேய ஞானிகளில் ஒருவர் "கறுப்பு மேகன்" என அழைக்கப்படும் யாழ்ப்பாண அரசரான கஸ்பார் பெரிய பெருமாள் ஆவார். இவர் பிற்காலத்தில் (கி.பி. 52ல்) புனித தோமா இந்தியாவிற்கு வந்தபோது, அவரிடம் திருமுழுக்குப் பெற்று அவருடன் பணிசெய்தார். இறுதியில் இருவரும் மறைசாட்சி மரணமடைந்து ஒரே இடத்தில், ஒரே கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டனர். இக்கதையானது போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான யுவான் டி பாறோஸ் (1496 - 1570) எழுதிய "ஆசியா" எனும் நூலில் காணப்படுகிறது.

மம்பேயி எனும் இன்னொரு ஆசிரியர் எழுதிய "இந்திய வரலாறு" எனும் நூலில் திருத்தூதர் பணியின் திருத்தொண்டன் பிலிப்புவால் திருமுழுக்களிக்கப்பட்ட எத்தியோப்பிய அண்ணகன் அக்காலத்தில் 'தப்ரபேன்' என அழைக்கப்பட்ட இலங்கையிலேயே நற்செய்தி போதித்தார் எனவும் அவருடைய பாதச் சுவட்டையே அவரின் பக்தர்கள் சிவனொளிபாத மலையில் வணங்கி அவரை நினைவு கூர்ந்ததாய் வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன.

யோவான் றிப்பெய்றோ எழுதிய மற்றொரு பழங்கதையின்படி அப்போஸ்தலர் தோமா இலங்கையில் தங்கியிருந்து நற்செய்தி போதித்தமையினை பல கிரேக்க, இலத்தீன், சீரிய திருச்சபைகள் சான்று பகர்கின்றன. அதுமட்டுமன்றி கி.பி. 3ம் நூற்றாண்டு தொடக்கம் இந்தியாவில் இருந்து வரும் மலபாரைச் சேர்ந்த, புனித தோமாஸ் கிறிஸ்தவர்கள் தம் முன்னோர்கள் அப்போஸ்தலரான புனித தோமாவினாலே மனந்திரும்பப்பட்டதாய்க் கூறுகின்றனர். இவ்வாறு இலங்கைக்கு நற்செய்தி கொண்டுவரப்பட்டிருக்கலாம். இது




கற்றனைத் தூறறிவுக் கேணி
கற்காதார் வாழ்வுவெறும் போணி
பெற்றபொரு ளூற்றதுணை சுற்றமெலாம் போனாலும்
நற்றவமாய் நின்றருள்வான் ஞானி.

- மலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உண்மையாகவிருந்தாலும் 2ம், 3ம், 4ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்த தாய்ச் சான்றுகள் இல்லை. எனவே, இன்று இவை களை வெறும் கற்பனைக் கதைகளாய் இருக்கலாம் என வரலாற்று வல்லுனர்கள் கூறுகின்றனர்.


## ஆதாரமுள்ள வரலாற்று உண்மைகள்

கி.பி.06ம் நூற்றாண்டிலே இலங்கையில் கிறிஸ்தவ சமூகம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. அபுசாயி, பெஞ்சமின் ரபாய் போன்றோர் அனுராதபுரக்காலத்தில் யூதேயக் கிறிஸ்தவர்கள் இருந்ததாய்ச் சான்று பகர்கின்றனர். "இந்திய கப்பலோட்டி" என அழைக்கப்படும் கொஸ்மஸ் இன்டிக்கொ பிளாஸ்தர் கி.பி 535ல் எழுதிய "கிறிஸ்தவ சபைகளின் விவரணம்" எனும் நூலில் இதுபற்றிக் கூறியுள்ளார். பின்னர் இதனை வஜூபோடி, எதிசி போன்ற எழுத்தாளர்கள் இலங்கை நாட்டு அரச சபையில் கிறிஸ்தவ மந்திரிகள் இருந்ததை உறுதி செய்தனர். பின்னர் கொஸ்மசின் கூற்றுப்படி பாரசீக குருக்களின் ஆன்மீகத்தில் வாழ்ந்த வணிகர்கள், வியாபாரம் சம்பந்தமாய் வந்து குடியேறி, சென்ற இடங்களிளெல்லாம் நெஸ்தோரிய பேதகத்தை தம் மதத்துடன் எடுத்துச் சென்றதாகவும், இக்கால கட்டத்தில் இந்தியாவின் தென் இந்தியக் கடலோரப் பகுதியில் வாழ்ந்ததாகவும் இது காட்டுகிறது. 5ம் நூற்றாண்டில் சிங்கள அரசப் படையில் "மைகாரா" என்ற இந்திய கிறிஸ்தவ தளபதி கடமையாற்றியதும் போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததற்கு சான்றாயுள்ளது.

இவ்வாறு வணிகம் சம்பந்தமாய் இவர்கள் தங்கியிருந்தமையால் தலைநகராய் விளங்கிய அனுராதபுரத்திலே இவர்கள் சமூகமும், ஆலயமும் இருந்தது. 1912ல் நடைபெற்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடச் சிதைவுகளும், கருங்கல்லில் செதுக்கப்பட்ட பாரசீக நெஸ்தோரிய சிலுவையும் ஆதாரத்தினை உறுதி செய்கின்றது. காலப்போக்கில் இவைகள் முஸ்லிம்களின் ஆதிக்கத்தால் சிதைவுற்றன. 16ம் நூற்றாண்டு வரை இலங்கையில் கிறிஸ்தவம் இருந்ததற்கான சான்றுகள் எதுவுமில்லை. எனவே தான் இலங்கைத் திருச்சபைச் சரித்திரத்தை வரலாற்று வல்லுனர்கள் போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பிக்க விரும்புகின்றனர். எனினும் 16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் அனுராதபுரத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததுபற்றி அறிந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீர்க்கதரிசனங்களின் நிலம்...

..... ஆனால், இக்கடல் அதன் அதீத உப்புத்தன்மையை மெல்ல மெல்ல இழந்து வருவது அவதானிப்புக்குரியது.





அடுத்தது நான் சந்தித்தது இன்னொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'மோரிய மலை'. கடவுள் ஒவ்வொன்றாய்ப் படைத்து வரும்போது, கல்லையும் படைத்தாராம். அவர் படைத்த அந்தக்கல் இந்த மோரிய மலையில்தான் போடப்பட்டதாம். உண்மையில் பழைய நகரம் புதையுண்டுபோக, அதன்மேல் கட்டப்பட்ட புதிய நகரங்களில் ஒன்றுதான் இந்த மோரிய மலையிலிருப்பது. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிடக் கொணர்ந்ததும் இந்த மலைக்குத்தான். வேதாகமக் குறிப்புகளில் காணப்படும் இந்த மலையை அதீதக் கற்பனைகளோடு உசாவினேன். அதனமைப்பும், வசீகரமும் நான் தரிசித்த ஏனைய மலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட அமைப்பாகத் தோற்றமளித்தன. காரணத்தை என் உள்ளுணர்வுகள் எனக்கு இவ்வாறுதான் உரைத்தன.

"நீ ... பிதாப்பிதாக்களின் காலடி பதித்த மண்ணில் நிற்கிறாய்" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




தொடர்பு சாதனங்கள், தெரிந்தோ தெரியாமலோ மனித வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டன. தகவல் தொடர்பை ஆங்கிலத்தில் 'கொம்யூனிக்கேசன்' என்பார்கள். இச்சொல் 'கொம்யூனிசு' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்ததாகும். 'கொம்யூனிசு' என்ற இலத்தீன் சொல்லுக்கு பொது வாக்கு, பகிர்ந்துகொள், செயல்விளைவு, செய்தியைப் பரப்பு என்னும் கருத்துகள் உண்டு. கருத்துகளை பொதுவாக்குவதே தொடர்பியலாகும். தொடர்பியல் என்பது ஒருவர் மற்றொருவருடன் தமது எண்ணங்கள், கருத்துகள், உணர்ச்சிகள், தகவல்கள் என்பனவற்றை பரிமாறும் செயலாகும். மனிதத் தொடர்பு என்பது பொருளுள்ள செய்தியை ஒருவர் இன்னொருவருக்கு அனுப்புவதாகும்.

தொடர்பு என்பதை 'ஜேர்கன் ரூஸ்ச்' என்பவர் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துவார். 'உயிரிகள் வாழும் தொடர்பற்ற பகுதிகளை ஒன்றோடொன்று இணைக்கும் விதிமுறையே தொடர்பு ஆகும்.

நவீன காலத்தில் தொடர்புசாதனங்களில் பிரதான இடத்தை வகிப்பவை அச்சு ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களுமாகும்.

ஊடகங்களின் பணிகள் குறித்த யுனெஸ்கோ அறிக்கையானது எட்டுவகையான செயற்பாடுகளை வரையறுக்கின்றது.

1. தகவல் பரப்புதல் (Dissemination of information)
2. சமூகமய மாதல் (Socialization)
3. ஒரு குறிப்பிட்ட செயலைப் புரியத் தூண்டுதல் (Motivation)
4. பொது மக்களின் வெளிப்பாடுகளை ஊக்கப்படுத்துதல், வழியேற்படுத்துதல் மற்றும் உரையாடுதல் (Promoting Devotes and discussion on Public Issues)
5. கல்வியில் வளர்ச்சி ஏற்படுத்துதல் (Education)
6. பண்பாட்டை ஊக்குவித்தல் (Cultural Promotion)
7. மகிழ்வைக் கொடுத்தல் (Entertainment)
8. முழுமைப்படுத்துதல் (Integration)

இதற்கிடையில் மனித உரிமைகள் பற்றியும் நாம் சற்று ஆராய்வோம். ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனிதனுக்கும் இருக்கவேண்டும் என நம்பப்படும் உரிமைகள் மனித உரிமைகள் எனப்படும். உரிமைகள் அனைவருக்கும் சமமாகப் பேணப்படவேண்டும். வகுப்பு, பால், இனம், நிறம், சாதி, பொருளாதாரம், அந்தஸ்து என்ற வேறுபாடு இல்லாமல் ஒவ்வொருவரினதும் உரிமைகளை ஏற்றுக்கொள்வதும், பாது காப்பதும் அனைவரினதும் கடமையாகும்.


அடிப்படை உரிமைகள்; குடியியல், அரசியல் உரிமை கள்; பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் ஆகிய மூன்று வகையான உரிமைகளும் பிறப்பின்மூலம் பெறப்படும் சட்ட ரீதியான மனித உரிமைகளாகும்.

குடியியல், அரசியல் என்னும் தலைப்பின் கீழ் வரும் உரிமைகளில் ஊடகப் பாவனைக்கான உரிமை, தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை, கருத்து வெளியிடும் உரிமை என்பனவும் அடங்கும். இவ்விடயங்களிற்கும் தொடர்பு சாதனங்கட்கும் இடையே நெருங்கிய தொடர்பும், பொறுப்புக் கூறலும் உண்டு.

இன்றைய நிலையில் தொடர்புசாதனங்கள் தமது தகவல் பரிமாற்றம் தொடர்பான பணியினை விட்டுவிட்டு, அதிகள வில் இலாபம் சம்பாதிக்கும் அல்லது இலாபம் சம்பாதிக்க உதவும் நிறுவன அமைப்புகளாக மாறிவிட்டனவா...? என்ற ஐயப்பாடு எழுந்து விட்டது.

தற்காலத்துத் தொடர்புசாதனங்கள் மூலம் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமை மக்களுக்குக் கிடைக் கின்றதா என்பதனை சற்று ஆராயத்தான் வேண்டும்.

நாடுகளைப் பொறுத்தமட்டில் அரச முதலீட்டில் இயங்கும் தொடர்புசாதனங்கள், தனியார் தொடர்புசாதனங்கள் என்ற இருவகை உண்டு. ஆனால், அவற்றுக்கு ஊடக சுதந்திரங் கள் உண்டா என்பதும் கேள்விக்குறியே! அரச ஊடகங்கள் அரசு




'நான் திருத்தந்தைக்காகச் செபிக்கிறேன்' என்ற முகநூல் பக்கம் சமூக வலைத் தளங்களில் பரவிவருகிறது.

கடந்த 2013ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பசிலிக்கா பேரா லய வளாகத்தில் கூடியிருந்த மக்கள் முன் முதன் முறையாகத் தோன்றிய போது, 'எனக்காகச் செபியுங்கள்' என்று கேட்டுக்கொண்டதை அடிப்படையாகக் கொண்டு இந்த முகநூல் பக்கம் உரு வாக்கப்பட்டுள்ளது என்று கத்தோலிக்க செய்தி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது.

இம் முகநூல் பக்கம் ஆங்கிலம், போர்த்துக்கீசியம், இத்தாலியம், பிரெஞ்சு, ஸ்பானியம், ஜேர்மன், ஹங்கேரி ஆகிய ஏழு மொழிகளில் வேகமாகப் பரவி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஊது குழல்களாக இருக்கும் வேளையில் தனியார் ஊடகங்களும், உத்தியோகப் பற்றற்ற வகையில் அரச கட்டுப்பாட்டிலேயே காணப்படுகின்றன.

ஆனால், லண்டன் பிபிசி. அரச ஊடக மாயினும் அரசினை விமர்சிக்கும் உரிமையும் அதற்குண்டு.

இலங்கையைப் பொறுத்தவரையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில், தொடர்பு சாதனங்கள் எந்தளவு இறங்கிப் பணியாற்று கின்றன என்பது வினாக்குறியே!

சில ஊடகங்கள் இலங்கையின் இன ஒருமைப்பாட்டை சீர் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனவா என்னும் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்த்துகிறோம்



இம்மாதம் 03ம் திகதி (03.07.2014) மட்டக்களப்பு மறைமாவட்டம் உருவான 2ம் ஆண்டு நிறைவாகும். இவ்வேளையில் நமது மறைமாவட்டத்தை வழிநடத்திச் செல்லும் ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை அவர்களையும் மற்றும் குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரையும் "தொண்டன்" நெஞ்சார வாழ்த்துகிறது.

**இறையரசுப் பாதையில் இனிதே நடந்திட வேண்டுகிறான்**

சிறுபான்மைச் சமூகங்களின் மதவழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படும்போதும் தமிழ் ஊடகங்கள் சில செய்திகள் வெளியிடும்போதும் பெரும்பான்மையின மொழிமூல ஊடகங்கள் அதனைத் தவிர்த்து விடுகின்றன அல்லது திரித்து விடுகின்றன. இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

அண்மையில் 'ஜனாதிபதி' அவர்கள் வடக்கு முதலமைச்சர் அவர்களை இந்தியாவுக்கு வருமாறு அழைத்துள்ளார்' என்று ஒரு குறுஞ்செய்தியை, குறுஞ் செய்தி ஊடகமொன்று வெளியிட்டிருந்தது. பின்னர் ஓரிரு மணித்தியாலங்களில் இன்னுமொரு குறுஞ்செய்தியை அது வெளியிட்டது: 'விக்னேஸ்வரன் அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டு விட்டார்' என்பதே அது!

தலையில் அடித்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஏதாவது சம்பவம் ஒன்றில் முஸ்லிம் அல்லது தமிழ் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படும்போது 'தமிழ் இளைஞர் கைது' என்று தலைப்புச் செய்தி வெளியிடும் பத்திரிக்கைகள், வேறு நபர்கள் கைது செய்யப்படும்போது 'சந்தேக நபர் கைது' என்று மட்டும் செய்தி வெளியிடுகின்றன.

இரண்டு தசாப்தங்கட்கு முன்பு படுவான்கரைப் பகுதியில் மதுசாரம் நஞ்சானதால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மாண்டு போயினர்; அதில் சில பெண்களும் அடக்கம். இவ்விடயத்தை செய்தியாக வெளியிட்ட பெரும்பான்மை மொழி ஊடகங்களும், அவற்றின் ஆங்கிலப் பதிப்புகளும் 'வடக்கு கிழக்கில் வாழும் தமிழ்ப் பெண்கள் அனைவரும் குடிகாரர்கள்' என்றவாறான தப்பான செய்தியை வெளியிட்டன.



இதைத் தவிர பெண்கள், சிறுவர் உரிமை மீறல்கள், குறிப்பாக துஷ்பிரயோக சம்பவங்களை 'பௌவியமாக' எடுத்துரைப்பதில் சில ஊடகங்கள் தவறிவிடுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும் வரை, மனித உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்களிற்கு தொடர்பு சாதனங்களும் பொறுப்புக்கூறவேண்டியேற்படும். ■




மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும்

**48வது உலகத் தொடர்பு தின விழா**

2014 ஆகஸ்ட் 09 சனிக்கிழமை
காலை 09.30 மணி
மட்/சாள்ஸ் மண்டபம்

உரைகள், கலை நிகழ்வுகள், கௌரவிப்புகள், பரிசுகள், விருதுகள், இன்னும் .......

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இம்முறை தொண்டனின் சில நிமிடங்கட்காக நாம் சந்திப்பது, மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. காசிப்பிள்ளை சித்திரவேல் அவர்களை. மிகமிகச் சாதாரணமான குடும்பத்தில் பிறந்து தனது விடாமுயற்சியாலும், கெட்டித்தனத்தாலும் உயரத்தை எட்டியடைந்த இவரை தொண்டனுக்காகச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். பேட்டிக்காக அணுகியபோது எவ்வித மறுப்புமின்றி அவர் சம்மதம் தெரிவித்தார்.

**உங்கள் இளமைப்பருவம் பற்றிச் சற்று சொல்லுங்கள்.......**

நான் 1965ம் ஆண்டு நவம்பர் மாதம் பதினோராம் திகதி, ஏறாவூர் நான்காம் குறிச்சியில் பிறந்தேன். எனது தகப்பனார் ஏழைத் தொழிலாளி ஆனால், அவர் எங்களை கஷ்டப்பட்டுக் காப்பாற்றிப் படிப்பித்தார்.

எனது க.பொ.த. (சா.த) வரையிலான கல்வியை ஏறாவூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் (தற்போது தமிழ் மகா வித்தியாலயம்) க.பொ.த (உ.த) கணித பிரிவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் கற்றேன்.

**நீங்கள் பல்வேறு படிநிலைகளினூடு தொழிற்துறைகளில் உயர்வடைந்து வந்துள்ளீர்கள் அதுபற்றிக் கூறமுடியுமா....?**

1990ம் ஆண்டில் கணித விஞ்ஞான ஆசிரியராக நியமனம் பெற்றேன். பின்னர் 1992 யூலை முதலாம் திகதி புள்ளி விபர உத்தியோகத்தராக இணைந்துகொண்டேன். இதற்கிடையில் இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தேன். 2007ம் ஆண்டு மார்ச் மாதம் பன்னிரெண்டாம் திகதி ஏறாவூர் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக நியமனம் பெற்றேன். சொந்த ஊரில் நியமனம் பெற்றமை தொடர்பாக சந்தோசம் அடைந்தேன். தொடர்ந்து கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் உதவிச் செயலாளராகவும் பணிபுரிந்து இவ்வாண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம் பெற்றேன்.

**உங்கள் உயர் கல்வித்துறை பற்றிக் குறிப்பிட முடியுமா...?**

நான் அரச துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே அதற்குச் சமாந்திரமாக எனது உயர்கல்விக்கான கற்கை நெறிகளையும் ஆரம்பித்தேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரியாக கலை இளமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். மட்டுப் படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சைக்கு ஒருவர் தோற்றுவதாயின் அவர் அரச சேவையில் பத்து வருடங்கள்



# தொண்டனின் சில நிமிடங்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

“உண்மையும், நேர்மையும், விடாமுயற்சியும், வாசிப்புப் பழக்கமும் உங்களை வாழ்வின் உச்சிக்குக் கொண்டுசெல்லும்.”

பூர்த்தி செய்திருக்க வேண்டும் அல்லது பட்டதாரியாயின் ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும். நான் இரண்டாவது வகையிலேயே விண்ணப்பித்தேன்.

நான் புள்ளி விபரத் திணைக்களத்தில் பணியாற்றும் காலத்திலேயே இலங்கை திறந்த பல்கலைக்கழகப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து சட்ட இளமானி கற்கை நெறியைப் பூர்த்தி செய்ததன் பயனாக 2012.02.19 அன்று சட்டத் தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டேன்.

பின்னர், காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமானிப் பட்டமொன்றையும் பெற்றுக்கொண்டேன். *SLIDA* நிறுவனத்தில் பொது நிர்வாகத் துறையில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளேன்.

இதற்கிடையில் நொத்தாரிசு, சத்தியப் பிரமாண ஆணையாளர் போன்ற நியமனங்களைப் பெற்றுக்கொண்டேன்.

**உங்கள் பணி வாழ்க்கையில் திருப்தி தந்தது என எதைக் குறிப்பிடுவீர்கள்.....?**

நான் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றியபோது 2011ம் ஆண்டின் முற்பகுதியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. இரவு, பகல் பாராது செயற்பட்டோம். பிரதேச செயலாளர், செயலகக் கணக்காளர், உடன் பணியாளர்கள் எல்லோரும் களைப்பைப் பொருட்படுத்தாது சளைக்காமல் பணியாற்றினார்கள். பல கிராமங்கள் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டிருந்தன. இயந்திரப் படகுகளில் பாதுகாப்பு மேற்சட்டையை அணிந்துகொண்டு நிவாரணப் பொருட்களைக் கொண்டு சேர்த்தோம்.

அத்துடன் *SLAS* பரீட்சைக்குத் தோற்றுபவர்கட்கான விசேட வகுப்புகளை நடத்துவது என் வழக்கம். எமது பிரதேச மக்கள் நிர்வாக சேவை அதிகாரியாக வரவேண்டும் என்பது என் அவா. எனது வழிகாட்டலில் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் நிர்வாக சேவை அதிகாரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை மிகவும் திருப்தி.

**உங்கள் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள் என எதனைக் குறிப்பிடுவீர்கள்...?**


எனக்குத் தொழிலில் நிம்மதி முக்கியம். எனவே, கடமையை நேர்மையாகச் செய்ய வேண்டும். கை சுத்தமாக இருக்கவேண்டும். அந்தவகையில் ஏறாவூர்ப்பற்று உதவிப் பிரதேச செயலாளராக ஐந்து வருடங்கள் பணியாற்றிய காலத்தில் எந்தவொரு அரசியல்வாதிகளும் என் பணிக்கு இடையூறு செய்ததில்லை.

அத்துடன் வித்தியாச, வித்தியாசமான அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. அவையெல்லாம் நல்ல, நல்ல *Casestudy* களாக எனக்கு அமைந்தன.

இதைத்தவிர, எனக்கு ஆரம்ப காலத்தில் வாய்த்த ஆசிரியர்களை மறக்கமுடியாது. சூறாவளி அடித்து முடிந்த காலம் அது! ஏறாவூர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்காலிகக் கொட்டில்களில் படித்துக் கொண்டிருந்தோம். பாடசாலையில் கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் இல்லை. அந்த வேளையில், இரண்டுபேர் (ஒருவர் க. குகராஜ், மற்றவர் இ. பெஸ்லியோ வாஸ்) எங்கள் பாடசாலையில் முற்றிலும் இலவசமாக தொண்டு அடிப்படையில் கணிதம், விஞ்ஞானம் கற்பித்தார்கள். மின்சார வசதி இல்லாதபோதும் மண்ணெண்ணெய் விளக்கு வைத்து இரவிலும் படிப்பித்தார்கள். பொது அறிவுப் போட்டிகளில் மட்டக்களப்பு நகரப் பாடசாலைகள் எங்களை முந்தியதே கிடையாது. வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டினார்கள். இதனால்தான் இன்று இவ்வாறான பதவிக்கு நான் வரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இயேசுவின் அன்பை எப்படிச் சொல்வேன்....?

தாயின் கருவறையில் உதித்தஅன்பு
பூமியின் கல்லறையில் வீழ்ந்ததென்ன?
உயிரையே தரணிக்கு ஈந்த அன்பு
உன்னதர் இயேசுவின் அன்பன்றோ!

உதிரம் ஆறாய்ப் பெருகியோட
சீமோன் சிலுவையைத் தூக்கியுதவ
விழுந்து விழுந்துபின் மீண்டுமெழுந்த
தந்தையின் மகனின் அன்பு என்னே!

முள்முடி தைத்திடக் கைகால்களில்
ஆணிகள் அறைந்த கயவர்களையே
மன்னித்து அவர்க்காய் மன்றாடிய
இயேசுவின் அன்பை என்னவென்பேன்?

ஆடைகள் இழந்தவ மானமுற்றும்
ஆறாத் துயரில் அமிழ்ந்திருந்தும்
ஆறுதல் அளித்தார் பெண்களுக்கு
ஐயனின் அன்பை என்ன சொல்வோம்!

மனிதருள் புனிதராய் வாழ்ந்த மகான்
மாண்புடை மனிதத்தின் உயர்வுதன்னை
மானிடர்க் கெடுத்துக் கூறிச்சென்ற
மாபெரும் செயலுக்கு ஈடுமுண்டோ...?

திருமதி. அன்னம்மா சகாயம்

இருப்பதொரு சாண்வயிறு போதும் போதும்
எல்லையிலா உணவெடுத்தால் நோய்தான்மீதும்
பருத்தவுடல் பலநோய்க்கு விருந்தாகும் பொருளெல்லாம்
மருந்துக்கே செலவாகும் அறி!




**வாசகர்கட்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

உண்மையும், நேர்மையும், விடாமுயற்சியும், வாசிப்புப் பழக்கமும் உங்களை வாழ்வின் உச்சிக்குக் கொண்டுசெல்லும்.

விடாமுயற்சியுள்ள ஒரு மனிதரை, நன்றி மறவாத ஒருவரை உலகிற்கு வெளிக்காட்டவுள்ள பெருமிதத்துடன் நன்றிகூறி விடை பெற்றுக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வீட்டு மருத்துவம்

## மருத்துவ குணம் மிகுந்த மகத்தான கீரை

# கரிசலாங்கண்ணி அல்லது கையாந்தகரை

'ஆரோக்கிய வாழ்வுக்குக் கீரைகள் மிகவும் தேவையானது' என்று மருத்துவர்கள் கூறுவர். பொதுவாகக் கீரைகள் நார்ச்சத்து உட்பட பல்வேறு சத்துகளைக் கொண்டவையாக உள்ளன.

தினமும் ஏதாவது ஒரு கீரையை நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்வது அவசியம். கீரை வகைகளில் அற்புதமான மருத்துவக் குணம் கொண்ட கீரை கரிசலாங்கண்ணிக் கீரை. இதனை கையாந்தகரை என்றும் கூறுவர்.

இக் கீரையில் மஞ்சள் கரிசலாங்கண்ணி, வெள்ளைக் கரிசலாங்கண்ணி என்று இரண்டு வகை உண்டு.

இதில், மஞ்சள் கரிசலாங்கண்ணியே சமையலுக்கு ஏற்றதும் மிகுந்த மருத்துவப் பயன் கொண்டதுமாகும். இது கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்குவதோடு, மஞ்சள் காமாலை நோயையும் குணப்படுத்துவதில் மிகவும் முக்கிய மானது.

இந்தக் கீரையிலிருந்து தைலம் தயாரித்து, தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் பார்வை தெளிவடைவதோடு தலைமுடியும் கருமையாக வும், பளபளப்புடனும் விளங்கும்.

சிலருக்கு உள்ளுறுப்புகளில் வேண்டாத நீர் சேர்வதுண்டு. வீக்கங்கள் உடலில் தோன்றும். வேண்டாத நீர்க்கசிவுகளை வெளியேற்றும் ஆற்றல் இதற்கு உண்டு. உடலில் பெருகும் நோய்க்கிருமி களைக் கொல்லும். பித்தம் சம்மந்தமான நோய்கள் எல்லாவற்றுக்கும் இது கைகண்ட மருந்தாகும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் மந்த நோய் களை இது குணமாக்கிவிடும். சளி அதிகரித்து மூச்சுத் திணறும் நிலை ஏற்படும்போது இதன் சாற்றைக் கொடுத்தால் அடைப்பு நீங்கிவிடும்.

பாம்பு, தேள் போன்ற விஷப்பூச்சிகள் கடித் தால் இதன் சாற்றைக் கொடுத்தால் விஷம் உடலில் பரவாமல் தடுக்கப்படும்.

சரும நோய்களால் அவதிப்படுபவர்கள் இந்தக் கீரையை மைபோல் அரைத்து வெளிப் பூச்சாகப் பயன்படுத்தினால் குணம் காணலாம்.


பல் சம்பந்தமான நோய்களால் துன்பப் படுகிறவர்கள் காலை வேளையில் கரிசலாங் கண்ணிக் கீரையை வாயில் போட்டு மென்று, அதைக்கொண்டே பல் துலக்கி வந்தால், பல் நோய்கள் குணமடைவதோடு வாய் துர்நாற்றமும் நீங்கும்.

'மது உடலுக்குக் கேடு' என்று அனைவ ரும் வாய்கிழியக் கத்தினாலும், பேசினாலும் சிலர் மதுவை நாளும் அருந்தி உடலைக் கெடுத்துக் கொள்கின்றனர். அதிகரித்த மதுப்பாவனையால் ஈரல் கெட்டு அரிபட்டுப் போகிறது. குடி உயிர் வாழ்வைக் குடித்துவிடுகிறது. மதுவால் ஈரல் கெட்டுப் போனவர்கள் உடனடியாக மது அருந்து வதை நிறுத்தி, ஒவ்வொருநாளும் காலையில் இக்கீரையை சமைத்துச் சாப்பிட்டாலோ,

22ம் பக் பார்க்க .....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஓமர் மசூதி

இது அன்றைய யெருசலேம் கோவிலின் தென் பாகத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் சாலமோனின் அரண்மனை அழகொளி வீசியதாக வரலாறு கூறுகின்றது. இங்கு நாள்தோறும் பலமுறை தொழுகை நடைபெறுகின்றது. தரை முழுவதும் விலை உயர்ந்த ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டுள்ளன. பெண்கள் தொழுகை நடத்தத் தனிப் பகுதி உண்டு. பெண்கள் தொழும் பகுதியை 'வெண் மசூதி' என்றழைப்பர். இம் மசூதியில் இயேசு பெருமான் பெயரால் ஒரு பிரார்த்தனை மேடையும், மோயீசன் பெயரால் ஒரு பிரார்த்தனை மேடையும் உண்டு. இவற்றை முறையே ஈசா மேடை, மூசா மேடை என்று அழைக்கின்றனர். இங்கு சுமார் ஐயாயிரம் பேர் அமர்ந்து தொழலாம். இதன் நீளம் 264 அடி அகலம் 180 அடி. இம் மசூதியைத் தூரத்திலிருந்து பார்க்கின்றபோது கிறிஸ்தவ ஆலயம் போல் தோன்றுகிறது. இதே இடத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கன்னி மரியாளின் ஆலயம் கம்பீரத் தோற்றத்துடன் நின்றதே இதற்குக் காரணம். இவ்வாலயத்துக்கு அருகில் மருத்துவமனை இருந்ததாகவும் வரலாறு கூறுகின்றது. இம்மசூதியின் தென்கோடி முனையில் மிகப் பெரிய மதில்சுவர் உள்ளது. இதன் முகட்டில்தான் நமதாண்டவர் அலகையினால் சோதிக்கப்பட்டதாகக் கூறுவர். இவ்விடத்தில் நின்று கீழே பார்த்தால் மிகப் பெரிய பாதாளம் தென்படும்.

இம் மூலையில் இருந்துதான் சின்ன யாகப்பரைக் கீழே தள்ளிக் கொன்றார்கள். இதற்குச் சற்றுத் தொலைவில் பழைய படிக்கட்டுகளைக் காணலாம். இப் படிகளில் நின்றுதான் புனித பவுல் தன்னுடன் வாக்குவாதம் செய்த யூதர்களுடன் தன் மனமாற்றம் பற்றியும் தான் இன்று இயேசுவின் சீடனாக விளங்குவதையும் ஆவேசத்துடன் வெளியிட்டார். எனவே, இந்த இரு மசூதிகளும் இன்று நிற்குமிடம் வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இடம். நமதாண்டவரின் மரணத்தின் வெறும் அடையாளமான பல்வேறு பலிகள் செலுத்தப்பட்டது இங்குதான். நமதாண்டவர் சிலுவையில் மரித்தவுடன் பழைய ஏற்பாட்டுப் பலிகளெல்லாம் இத்துடன் முடிந்துவிட்டன என்பதன் அறிகுறியாக, புனிதத்திலும் புனிதமான இடத்தில் உள்ள திரைச்சீலை கிழிந்த இடமும் இதுவே! ■





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தொகைநிலைப் பெயர்கள்

– வயலற் சந்திரசேகரம் –

– சென்ற இதழ்த் தொடர்ச்சி

**அறுசுவை -** தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு

**ஆறு**
**அறிவுகள் -** பார்வை, கேள்வி, முகர்தல், சுவைத்தல், தொடுகை, பகுத்தறிவு

**ஆறு**
**பருவம் -** கார், கூதிர், முன்பனி, முதுவேனில், இளவேனில், பின்பனி

**ஆறு**
**தொழில் -** ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேள்வித்தல்

**ஆறு பகை -** காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்

**ஏழு**
**ஸ்வரங்கள் -** ஸ, ரி, க, ம, ப, த, நி.

**ஏழிசை -** ஷட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம்

**ஏழு மலை -** கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி

**ஏழு பருவம் -** பேதை, பொதும்பை, மங்கை, மடந்தை, சரிவை, தெரிவை, பேரிளம் பெண்

**எட்டு ஐஸ்வரியம் -** தனம், தான்யம், நிதி, பசு, புத்திரர், வாகனம், இசை, தைரியம்.

**எண் தொகை நூல்கள் -** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநாநூறு, புறநானூறு

**எட்டுத் திசை -** வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு

**நவரத்தினம் -** வைரம், வைடூரியம், கோமேதகம், முத்து, மரகதம், புஷ்பராகம், மாணிக்கம், நீலம், பவளம்.

**நவக்கிரகம் -** சூரியன், இராகு, கேது, சந்திரன், சனி, சுக்கிரன், செவ்வாய், புதன், வியாழன்

**நவதானியம் -** உழுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, சாமை, தினை, துவனா, நெல், பயறு

**பத்துப்பாட்டு -** திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாநாற்றுப்படை, பெரும்பாநாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்ப்பு

## குறுங்கதை – 06


இந்த வழக்கில் இரண்டாவது சந்தேக நபரெனக் குறிப்பிடப்பட்ட வைத்தியலிங்கம், போதிய ஆதாரமின்றி குற்றஞ்சாட்டப்பட்ட நிரபராதியெனக் கொண்டு நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட எதிராளியே அந்தக் கொலையைச் செய்தாரென ஆதாரங்கள் நிரூபிப்பதாகக் குறிப்பிட்டு, மரண தண்டனை விதிக்கப்படுவதாக அறிவித்து, தீர்ப்பெழுதிய பேனா முனையை மேசையில் குற்றி உடைத்து தன் பங்கை முடித்துக்கொண்டார் நீதிபதி.

“உண்மைக் குற்றவாளியைத் தப்ப வைத்து எனக்கு மரண தண்டனையா...?” என அழுது புலம்பி அரற்றிய வைரமுத்துவை யாரும் பொருட்படுத்தவில்லை.

நீதிமன்றுக்கு வெளியே ‘சரியான தீர்ப்பு’ என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

தனது கணவனை அடித்துக் கொன்றதாக அவரது சகோதரன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியானதெனக் கருதியதாற்போலும், செல்லமுத்துவின் மனைவி கண்களைத் துடைத்துக்கொண்டாள்.



வைரமுத்துவுடன் வைத்தியலிங்கம் சிநேகமாயிருந்தாலும், கொலை நடந்த அன்று காலை அவர் வந்து போனதாலும், அவரும் கொலைக்கு உடந்தையாய் இருந்திருப்பாரோ என்ற சந்தேகத்தில்தான் செல்லமுத்துவின் மனைவி இருவர் மீதும் குற்றம் சுமத்தி வழக்கு தாக்கல் செய்திருந்தாள்.

எனினும் வழக்கு பன்னிரண்டாவது தவணையில் கூப்பிடப்பட்டபோது, எதிர்தரப்பு வழக்கறிஞர் தம் கட்சிக்காரரைப் பிணையில் விடக்கோரிய போது வழக்காளி எதிர்ப்புத் தெரிவிக்காததால் வைத்தியலிங்கம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

ஆனால், கொலைபற்றிய துப்புத்துலக்க மாறுவேடத்தில் சென்ற புலனாய்வுப் பிரிவினர் கையளித்த அறிக்கையே வைத்தியலிங்கத்தை விடுவிக்க ஆதாரமாயிருந்தது.

தனக்கும் தம்பிக்கும் பகையிருந்தபோதும், தம்பியைக் கொல்லுமளவுக்கு தான் ஒருபோதும் எத்தனிக்கவில்லையென்றும், வைத்தியலிங்கம் தங்களது உட்பகையைச் சாட்டாக வைத்து செல்லமுத்துவைக் கொன்றானென்றும், தம்பியின் மனைவிமீது வைத்தி மையல்கொண்டிருந்தானென்றும் கூறிய வைரமுத்துவின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

புலன் விசாரணை செய்யப் புறப்பட்ட குழு, வைத்தியலிங்கம் காளை மாடுகளை வளர்த்து விற்றுப் பிழைப்பவனென்று அறிந்து கொண்டு மாடு வாங்கப்

— வீக்கேயெம்

போகும் சாதாரண மனிதரொருவரைப் போலவும் மற்றவர் மாட்டுத் தரகரென்றும் கூறிக்கொண்டே வைத்தியலிங்கம் வீட்டுக்கு அதிகாலையிலேயே புறப்பட்டுச் சென்றார்கள்.

அங்கே, வைத்தியலிங்கம் சாய்மானக் கதிரையொன்றில், மார்பில் புத்தகத்தை விரித்துவைத்தவாறே நித்திரையில் இருந்ததாகவும், அவர் உண்மையில் தூங்குகிறாரா என்று அவதானித்துக்கொண்டு சிறிதுநேரம் தாம் அங்கேயே நின்றதாகவும், புத்தகம் நழுவி விழுந்தபோதும் அதனை எடுப்பதற்கு அவர் முயற்சிக்கவில்லை என்றும், அந்நேரம் பார்த்து அவர் மார்பில் கைவைத்தபோதும் அவர் எந்தவித சலனமுமின்றி கண்விழித்துப் பார்த்ததாகவும், தம்மைக் கண்டு பதற்றமடையவில்லை என்றும், அப்படியே பிணையிலே விடுவிக்கப்பட்டிருந்தாலும் உளப்பாதிப்புக்குள்ளாகி இருப்பாரென்றும், அவை எதுவுமேயில்லாததால் அவர் நிரபராதியாகவே இருக்கக்கூடுமென்றும், நீதிமன்றின் தீர்ப்பிற்கு அந்த விடய அறிக்கையைச் சமர்ப்பிப்பதாகவும் அவர்கள் அறிக்கையிட்டார்கள்.

அதேவேளை, வழக்காளியான கைம்பெண் செல்லமுத்து விசாலாட்சி, அவர் மீதான குற்றச்சாட்டை மீளப் பெறுவதாகக் குறிப்பிட்டிருந்ததாலுமே வைத்தியலிங்கத்தின் விடுதலை சாத்தியமானது.

ஆனால் வைத்தியலிங்கம் .....?

உண்மையில் குறித்த நபரைக் கொல்ல வேண்டுமென்று அவரைக் கொட்டானால் அடிக்கவில்லை.



தர்ம அடி கொடுத்து தம்பியை எச்சரிக்குமாறு வைரமுத்து கோரியதாலேயே அந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்து விட்டிருந்தது.

எது எப்படியோ, தூண்டிய குற்றத்திற்காக மரண தண்டனையா என வைரமுத்து கலங்கித்தான் போனான். ■

**வீட்டு மருத்துவம் தொடர் ....**

அல்லது சாறுபிழிந்து குடித்து வந்தாலோ, கெட்டுப்போன ஈரல் மீண்டும் நல்ல நிலையை அடையும்; ஆரோக்கியம் திரும்பும்.

சிலருக்கு மறதி நோய் உண்டு. மறதி நோய் தொடர்பாக அறிஞர்களின், விஞ்ஞானிகளின் சுவாரஷ்யமான கதைகளுமுண்டு. முன்பெல்லாம் பெரியவர்களுக்கிருந்த மறதி இன்று இளவயதினரையும் விட்டபாடில்லை. “எவ்வளவு படித்தாலும், தலையில் ஏறுதில்லை, நிற்குதில்லை” என்று புலம்புவார்கள். இம் மறதிக்காரர்கள் வாரத்திற்கு மூன்று நாட்கள் வீதம் இரண்டு மாதங்களுக்கு நெல், பாசிப்பருப்புடன் கலந்து பொரியல் செய்து இக்கீரையைச் சாப்பிட்டு வந்தால் புத்தி தெளிவடையும், மறதி போகும். ஹோமியோபதி மருத்துவத்தில் ‘அனகார்டியம்’ என்னும் மருந்து மறதியை, குடல் புண்களைப் போக்கவல்லது.

கரிசலாங்கண்ணிக் கீரையின் மகத்துவத்தைச் சொல்லிக்கொண்டே போகலாம். இது காய்ச்சல், தடுமல், காதுவலி, மார்புவலி, யானைக்கால், தொழுநோய், இரத்த சோகை, மூலம், இரத்தப்போக்கு, தலைப்பொடுகு, இளநரை, கண்பார்வைக் குறைவு, வாதம், புத்திக்குறைவு என ஏராளமான நோய்களைக் குணமாக்கவல்ல அற்புதமான கீரையாகும்.

இதன் பெயரையும், பயனையும் இன்றைய தலைமுறையினர் பெரும்பாலும் அறிவதுமில்லை, பயன்படுத்துவதுமில்லை.

ஆரோக்கிய வாழ்க்கையில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் கரிசலாங்கண்ணியை அறிவதும் பயன்படுத்துவதும் அவசியமாகும். ●

- ஆனந்தசித்தன் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'சின்னான்' குறும்பட வெளியீடு

## ஒரு கருத்துப் பகிர்வு

அனைத்துத் துறைகளிலும் வேகமான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலமிது. இவ்வேகமான மாற்றங்களும் வாழ்க்கை முறையும் காலச் சுருக்கத்தை எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாதது. எடுத்துக்காட்டாக, நான்கு ஐந்து நாட்களாக நடைபெறும் "டெஸ்ட்" கிறிக்கட் போட்டிகள் ஒருநாள் போட்டியாக மாறின. இப்போது அதுவும் குறுகி 20-20 வது போட்டிகளாக மாறிவிட்டன.

"பொன்னியின் செல்வனும்", "கடல் புறாவும்", "அகல் விளக்கும்" படித்த காலங்கள் போய், இப்போது ஒரு பக்கக் கதையும், கடுகுக் கதையும் படிக்கத்தான் நேரம் கிடைக்கிறது. அதேபோன்று, நான்கரை மணித்தியாலங்கள் ஓடிய திரைப்படங்கள் இரண்டரை மூன்று மணித்தியாலங்களாகின. இப்போது, அரை மணித்தியாலங்களுக்குள் முடிந்துவிடும் குறுந்திரைப்படங்கள் மேல் ஆர்வம் அதிகரித்துள்ளது.

இன்று உலகெங்கும் குறும்படத் தயாரிப்புகள் பெருகி வருகின்றன. குறும்பட விழாக்கள், பரிசளிப்புகள் என்று களைகட்டுகிறன. நீண்ட திரைப்படங்களைத் தயாரிக்க ஏற்படும் பெரும் பொருட் செலவும், தொழிநுட்ப அறிவும் பயிற்சியும் அனுபவங்களும் திரைப்படத் தயாரிப்பை வசதியும் வாய்ப்பும் திறமையும் மிக்க சில குழுக்களுடனே மட்டுப்படுத்தி வைத்திருந்தது.

இன்று பெருகியுள்ள நவீன தொடர்பு சாதனங்களும் அனைவருக்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடிய அவை பற்றிய அறிவும், குறைந்த பொருட்செலவும் ஆர்வமுள்ள பலரும் குறும்படத் தயாரிப்பில் ஈடுபட வசதி அளித்துள்ளது. அவ்வகையில் மாணவ மாணவிகள் தொடக்கம் பலதரப்பட்டவர்களும் இன்று குறும்படத் தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு, தயாரிக்கப்படும் குறும்படங்களில் கருத்துச் செறிவும், கலை நயமும், தொழில் நுட்பத் திறனும் மிக்கவை எத்தனை? என்பது வினாவுக்குரியது. ஆனால், இன்றைய சூழ்நிலை ஆற்றலும், ஆர்வமும் உள்ள பலருக்கும் திரைப்படத் துறையின் வாசலை அகலத் திறந்துள்ளது என்பது ஆரோக்கியமானதே!

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல குறுந்திரைப்படங்கள் (ஏறக்குறைய 175 வரை) தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இவற்றுள் சில பரிசுகளும் பாராட்டுகளும்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விருதுகளும் பெற்றுள்ளன என்பது பெருமைக் குரியது.

கடந்த மே மாதம் 10ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு "பைன் ஆட்ஸ் கிரியேசன்ஸ்" வழங்கிய தேவ அலோசியசின் "சின்னான்" குறும்பட வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. மட்டக்களப்பு சாந்தி திரையரங்கில் நடைபெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வுக்குப் பலரும் வருகை தந்திருந்தனர். "ஆசிரியர்களுடைய பிழையான - பொறுப்பற்ற அணுகுமுறை மாணவர்களுடைய கல்வியை, வாழ்க்கையை எவ் வாறு பாதிக்கிறது" என்பதே "சின்னான்" குறும்படத்தின் கருப்பொருளாகும். இக்குறும் படத்தின் இயக்குனரும், அவரது குழுவில் சிலரும் ஆசிரியர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தந்தையில்லாது தாயுடன் வறுமையில் வாடும் சின்னானின் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாத ஆசிரியர்கள் அவனது தவறுகளைப் பெரிதுபடுத்தி, தண்டித்து, பாடசாலையை விட்டு நீக்குகின்றனர். அதன்பின்னர் அவன் கராஜ் ஒன்றில் வேலைசெய்கிறான். அங்குவரும் ஒரு பெரியவர், படிக்கவேண்டிய வயதில் அவன் வேலை செய்வதைக் கண்டு இரக்கப்பட்டு அவனைத் தாமே பொறுப்பெடுத்துப் படிப்பிக்க முனைகிறார். இதுவே, சின்னான் குறுந் திரைப் படத்தின் கதைச் சுருக்கம்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதாகக் கருதப்படும் ஒரு காலகட்டத்தில், சிறுவர்களது உரிமைகளுக்காக அனைத்துலக அளவில் குரல் கொடுக்கப்படும் சூழ்நிலையில், சிறுவர்களை, அவர்களது எதிர்காலத்தை உருவாக்கும் பாடசாலைகளே சிலரது நடவடிக்கைகளால் சிறுவர்களின் வீழ்ச்சிக்கும், வேறுபல தவறுகளுக்கும் காலாகிப் போவதை திரைப்படம் தெளிவாகச் சொல்கிறது. அதேவேளை சிறுவர்கள் மட்டில் சமூகத்துக்குள்ள கடமையையும் பொறுப்பையும் சின்னானைத் தத்தெடுத்துப் படிப்பிக்க முனையும் பெரியவர் ஊடாகக் கதாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

திரைக்கதை ஆசிரியரும், இயக்குனருமான தேவ அலோசியஸ் தாம் சொல்லவந்த கருத்தை மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார். இது உண்மையாகவே நடைபெற்ற ஒரு நிகழ்வை அடிப்படையாகக் கொண்டதென அவரே தமதுரையில் குறிப்பிட்டார். "சின்னான்" குறும்படம் கூறவந்த செய்தியை பார்வையாளரிடம் கொண்டு செல்வதில் வெற்றிபெற்றுள்ளது. படத்தின் ஒளிப்பதிவு, காட்சி அமைப்பு, பின்னணி இசை, தொகுப்பு போன்றவை குறை சொல்லும்படியாக இல்லை. அதேவேளை உரையாடல், நடிப்பு, ஒலிப்பதிவு போன்றவை மேலும் செம்மையடைய வேண்டும். நாடகத் தன்மையுள்ள உரையாடலும், நடிப்பும் நம்மைப் படத்திலிருந்து அந்நியப்படுத்துகின்றன. செயற்கைத் தன்மையற்ற இயல்பான உரையாடல், நடிப்பு, பேச்சு வழக்கு என்பன வேண்டற்பாலது. அதேவேளை, வேண்டாத ஒன்றும் அன்று நடந்தது. "சின்னான்" குறும்படம் பார்க்கப் போய் எனது அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அட்டை, வங்கி அட்டைகள் (ATM), சாவிக்கொத்து, பணம் ஐயாயிரம் இவை அனைத்தும் அடங்கிய பையைத் தொலைத்து விட்டு, வியர்க்க விறு விறுக்க கடவுளை வேண்டிக்கொண்டு அந்த இரவு வேளையில் வீதியில் அலைந்ததும் பின்னர் அது கையில் கிடைத்ததும் ஒரு தனிக்கதை. சரி, அதுபோகட்டும்.

தேவ அலோசியஸ் அவர்கள் இதுவரை 14 குறும்படங்களைத் தயாரித்தவர். பல மேடை நாடகங்களை அளிக்கை செய்து விருதுகள் பல வென்றவர். பல வானொலி நாடகங்களையும் தயாரித்தவர். ரூபவாஹினியில் இவரது நாடகங்கள் ஒளிபரப்பாகியுள்ளன. அத்துடன் அரங்கவியல் பயிற்றுவிப்பாளரும் கூட. அவரிடமிருந்து இன்னும் அதிகமாகவே எதிர்பார்க்கிறோம். அதை வழங்கக்கூடிய ஆற்றலும் திறனும் அவருக்குள்ளது எனும் நம்பிக்கை எமக்குண்டு.

- மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**ஆடி மாதம் 1ந் திகதி : புனித தியெரி (தியோடொரிக்)**

கி.பி. 5ம் நூற்றாண்டின் பிற்பாதியில் ரெம்ய்ஸ் நகருக்கண்மையில் பிறந்தார். குறைகள் நிறைந்த வாழ்க்கைப் பின்னணியைக் கொண்டவர். தந்தை மார்குவார்ட் நெடுந்தெருவில் கொள்ளையடித்துச் சீவியம் நடத்தினார். தாயும் நல்லவள் இல்லை. ஆனால், இக்குழந்தை இறை பராமரிக்கைக்குத் தெரிவானார். கல்லில் வாழும் தேரைக்கும் உயிரளிக்கும் வள்ளல் இறைவனல்லவா....? அவரது திருக்கரம் இவரைச் சகதியிலிருந்து தூக்கியெடுத்து முத்தாக்கியது. எனவே, குழந்தை இவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ரெய்ம்ஸ் மறைமாவட்ட ஆயர் புனித ரெமிஜியஸ் ஆண்டகையின் கவனிப்புக்குக் கீழ் வைக்கப்பட்டார்; கல்வி புகட்டப்பட்டார். காலம் சென்றது. இவர் ஆயருக்கு உதவி புரியும் தியாக்கோன் நிலையைப் பெற்றார். இவரது கஷ்டகாலம் அவரது உறவினரின் கட்டாயத்தினால் திருமணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தன் மனைவிக்குத் தன் நிலையை எடுத்துக்கூறி, மனைவிக்குரிய உரிமைகளை விட்டுக்கொடுக்க வைத்தார். ஆயர் இவரை ரெய்ம்சுக்கு அண்மையிலுள்ள மொண்ட் டி ஓர் எனும் இடத்திலமைந்திருந்த ஆச்சிரமத்தை மீளமைக்க அனுப்பினார். மடாதிபதியாக நியமித்தார். பக்திமிகு ஆர்வமுள்ள இத்துறவியின் குறிப்பிடத்தக்க உரையாடல்களால் ஈர்க்கப்பட்டும், சக்திமிக்க போதனைகளின் தாக்கத்தாலும், பாவங்களை நினைத்து வருந்துபவர்க்கான சிரத்தைமிக்க புத்திமதிகளாலும் இவர் புகழ் பெற்றார். இவற்றுக்கு மத்தியில் இவரது தந்தை தீய வழிகளிலிருந்து காக்கப்பட்டு இறைவனது இரக்கத்தைப் பெற்றவராக இவரது ஆச்சிரமத்தில் மரித்தார். இவர் இவ்வாறு பல அரிய விடயங்களைப் புதுமைகளாகச் சாதித்துள்ளார். நோயாளர் வாழ்ந்த இல்லமொன்று புதுமையாக, அருட்சகோதரிகளின் இல்லமானது இவரது சாதனையால்தான். இன்னுமொரு புதுமை மிக முக்கியமானது. குளோவிஸ் அரசனின் மூத்த மகனான ஒஸ்ரேசியா மன்னன் 1ம் தியெரிக்கு உதவியதைக் கூறலாம். இவர் கண்கள் சம்பந்தமான ஒரு நோயினால் பெரிதும் வருந்தினார். மருத்துவம் செய்த வைத்தியர்களோ, ஒரு கண்ணை சத்திரசிகிச்சை மூலம் எடுக்காவிட்டால் இறக்க நேரிடும் என்று எச்சரித்தனர். மன்னனோ தன் எதிரிகளிடம் தன் மதிப்புக் குறைந்துவிடுமென நினைத்து முடியாதென மறுத்துவிட்டான். இவ்வேளையில் தியெரி அங்கு அழைக்கப்பட்டார். மாளிகைக்கு வந்த அவர், மன்னனின் கண்களை ஆசிர்வதித்தார். இரு கண்களுமே முழுமையாகக் குணம்பெற்றன. பின், மன்னன் இப்பரிசுத்தமான மனிதரை 533ம் வருடம் ஆடித்திங்கள் 1ம் நாளில் இறக்கும் வரைக்கும் சென்று தரிசிப்பதைக் கைவிடவேயில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**ஆடி மாதம் 2ந் திகதி : புனித பேர்னார்டினோ றீலினோ**



1530ம் வருடத்தில் இத்தாலிய நாட்டின் கப்ரி நகரத்தில் வாழ்ந்த பிரபுக்கள் குடும்பத்தில் இவர் உதித்தார். தனது கிறிஸ்தவக் கல்வியைத் தாயிடமிருந்து பெற்றார். பொலோக்னா பல்கலைக் கழகத்தில் வைத்தியத் துறையைக் கற்றார். ஆனால், 3 வருடங்களின் பின் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுச் சட்டக்கல்வியை மேற்கொண்டார். 1536ம் வருடத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். அவரது கல்வி, அர்ப்பணம், சட்டத்துறையிலிருந்த கெட்டித்தனம் எங்கும் பரவின. 1564ம் வருடத்தில் நேபிள்ஸ் நகருக்கு வரவழைக் கப்பட்டார். அங்கு கணக்காய்வாளர், இராணுவத் தளபதி ஆகியோரின் நிலைமைகளை அறியவே அங்கு சென்றார். குறுகிய காலப்பகுதிக்குள் இந்த உயர்வான இளைஞன் தூய கன்னிமரியாவின் காட்சியின் உதவியால், தனக்குத் தேவ அழைத்தல் இருப்பதை உணர்ந்து இயேசு சபையில் தம்மை இணைத்து, 1567ம் வருடம் குருவுமானார். மூன்று வருடங்கள் நேபிள்சில் தம்மைப் பணிவாழ்வுக்கு முற்றும் மனப்பூர்வமாகக் கையளித்து கடினமாக உழைத்தார். ஏழைகள், இளைஞர்களுக்குப் பணிபுரிந்தார். பின் அவர் லெக்சி எனுமிடத்திற்கு அனுப்பப்பட்டார். தம் வாழ்வின் இறுதி நாற்பத்திரண்டு வருடங்களை அங்கேயே அவர் கழித்தார். இடைவிடா கடின உழைப்பின் பேறாக இவரது மறைபரப்புப் பணி ஒரு மகத்தான இடத்தைப் பெற்றது. ஒப்புரவு செய்வோருக்கு முன்மாதிரிகையானவர் இவர். சக்திமிக்க போதனையாளர், இளைஞரின் விசுவாச வாழ்விற்கு ஆசிரியர்; ஆன்மாக்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட ஆயன். அதேவேளை லெக்சியின் இயேசுசபைக் கல்லூரியின் முதல்வராகவும், இயேசுசபை மேலாளராகவும் பணிபுரிந்தார். இவரது சபை ஏழைகட்கும் நோயாளர்கட்கும் அளவுகடந்த இரக்கங் காட்டியபோது எதிர்த்த பகைவரையும், பொதுமக்களின் அவதூறுகளையும் அந்தந்த வேளைகளில் முறியடித்தார். இவரது மாபெரும் பணிவாழ்வால் மக்கள் அவரை ஏற்று அன்பு செய்தனர். இதன் வெளிப்பாடாக 1616ம் வருடம் இவரது மரணப்படுக்கையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த நகர உயர் நீதிபதி வந்து தமது நகரம் முழுவதையும் அவரது பாதுகாவலில் ஏற்றுக்கொள்ளுமாறு மன்றாடினார். பேசமுடியா நிலையிலிருந்த பேர்னார்டினோ தலையை அசைத்து வணங்கினார். இறுதியாகத் தன் உதடுகளில் இயேசு மரி என உச்சரித்துக் கொண்டு இறைபதமெய்தினார்.

## திருத்தந்தை இலங்கை வருகிறார்....!

எதிர்வரும் ஜெனவரித் திங்கள் 13ம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அண்மையில் திருத்தந்தையைச் சந்திக்க உரோமைக்குச் சென்றிருந்த இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் வேண்டுகோளுக்கிணங்க, திருத்தந்தை பிரான்சிஸ் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.



தமது இலங்கைப் பயணத்தின் போது திருத்தந்தையவர்கள் பல தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளார். நாட்டின் சமாதானமும், நல்லிணக்கமும் ஏற்பட அனைவரும் உழைக்க வேண்டும் என்று திருத்தந்தை ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.07.2014

# விவிலியம் கற்போம் – 133

பரிசுப் போட்டி

யோசுவா : 12:1–24

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

யோர்தானுக்கு அப்பால் கதிரவன் உதிக்கும் பக்கம் அர்னோன் பள்ளத்தாக்கிலிருந்து எர்மோன் மலைவரை கிழக்குப் பகுதியில் அராபா முழுவதிலும் இஸ்ரயேலர் கைப்பற்றிய நாடுகளின் ...................... இவர்களே: எமோரிய மன்னன் சீகோன் எஸ்போனில் வாழ்ந்தான். அவன் அர்னோன் பள்ளத்தாக்கின் எல்லையிலிருக்கும் அராயேரிலிருந்து பள்ளத்தாக்கின் எல்லையிலிருக்கும் ...................... பள்ளத்தாக்கின் நடுவில் கிலயாதின் பகுதிவரையிலும் அம்மோனியரின் எல்லையான யப்போக்குப் பள்ளத்தாக்கு வரையிலும் அராபாவிலிருந்து கிழக்கே கினரோத்துக் கடல்வரையிலும், உப்புக் கடலான ...................... கடல் வரையிலும், கிழக்கு நோக்கி பெத்தசிமோத்து வரையிலும், தெற்கில் பிஸ்கா மலைச்சரிவு வரையிலும் அரசாண்டான். இரபாயியருள் எஞ்சியிருந்தவனும், பாசானின் மன்னனுமான ...................... எல்லை இதுவே: அவன் அஸ்தரோத்திலும் எதிரேயியிலும் வாழ்ந்தான். எர்மோன் மலை, சல்கா மலை, கெசூரியர், மாக்காத்தியரின் எல்லை வரையிலும் எஸ்போன் மன்னன் சீகோனின் ...................... கிலயாதின் பாதி வரையிலும் ஆண்டான். ஆண்டவரின் ஊழியரான மோசேயும் இஸ்ராயேலரும் அவர்களைத் தோற்கடித்தனர். ஆண்டவரின் ஊழியரான மோசே அதை ரூபனுக்கும் காத்துக்கும் ...................... பாதிக் குலத்திற்கும் உரிமையாகக் கொடுத்தார். யோசுவாவும், இஸ்ரயேலரும் கைப்பற்றிய நாடுகளின் மன்னர்கள் இவர்களே, யோர்தானுக்கு மேற்கே பாகால்காதில் லெபனோன் பள்ளத்தாக்கிலிருந்து ...................... பக்கம் செல்லும் ஆலாக்கு மலைவரை இருந்த மன்னர்களின் நாட்டை யோசுவா இஸ்ராயேலருக்கு அவர்களின் குலப்பிரிவின்படி உடைமையாக்கினார். ...................... பள்ளத்தாக்கு, அராபா மலைச்சரிவு, பாலைநிலம், நெகேபு, இத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர் ஆகியோரின் நாடுகள், எரிகோ மன்னன், பெத்தேலுக்கு அருகிலிருந்த ஆயி மன்னன், ......................, எபிரோன், யார்முத்து, இலாக்கிசு, எக்லோன், கெசேர், தெபீர், கெதேர், ஒர்மா, அராது, லிப்னா, அதுல்லாம், மக்கேதா, பெத்தேல், தப்புவாகு, ஏபேர், அப்பேக்கு, இலாசரோன், மாதோன், ஆட்சோர், சிம்ரோன், மெரோன், அக்சாபு, ...................... , மெகிதோ, கெதேசு, யோக்னயாம் கர்மேல், நாபோத்தோரிலிருந்த தோர், கில்காலில் இருந்த கோயிம், திர்சா ஆகியவற்றின் மன்னர்கள் எல்லோரும் முப்பத்தொரு பேராவர்.

**விடைகள்:** **இவ்வியரிடம், அப்பம், கிபயோன், கெபிரா, யோசுவாவுடனும், கடவுளின், அருகில், வாக்குறுதி, எமோரிய, காய்ந்த.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 133

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. பொதுநலவாய நாடுகள் ஒன்றியம் தோன்றிய ஆண்டு
   *(1945 - 1944 - 1950)*

2. 'அன்னா கரினா' என்ற புகழ்பெற்ற நாவலின் ஆசிரியர்
   (மாக்சிம் கார்க்கி - டால்ஸ்டாய் - சல்மான் ருஸ்டி)

3. பூமியின் மேற்பரப்பில் அதிகம் காணப்படும் உலோகம்
   (தாமிரம் - அலுமினியம் - வெள்ளி)

4. 'மஞ்சள் காமாலை நோய் பாதிக்கும் உறுப்பு
   (நுரையீரல் - கல்லீரல் - இருதயம்)

5. ஒரு சொல்லில் 'போன்ற' என்பது மறைந்திருந்தால் அது ....................
   (பண்புத் தொகை - உவமைத்தொகை - உம்மைத் தொகை)

6. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி ........................ பாயும்
   (பத்தடி - பதினாறடி - பன்னிரண்டடி)

பெயர் : ................................................................................................

முகவரி: ................................................................................................

................................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 133

தொண்டன்

அ. பெ. எண் - 44

மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

....................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 131 விடைகள்

(இப்போட்டிக்காக குறிப்பிடப்பட்டிருந்த திருவிவிலிய வசனங்கள் தற்செயலாக பிழையாக அமைந்துவிட்டமைக்கு வருந்துகிறோம். ஆயினும், பல போட்டியாளர்கள் சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதி இருந்தார்கள். நமது பாராட்டுகள்....)

அதோனிசெருக்கு, ஐந்து, அஞ்சாதே, பெருங்கற்களை, மக்கள் இறக்கிவிடுமாறு, ஆண்டவர், தெபீருக்கு, காதேசு

## அறிவை வளர்ப்போம் - 131 விடைகள்

1. பிறெட்றிக் நோர்த்
2. மல்கம் இரஞ்சித்
3. மோகனாங்கி
4. அபாக்கஸ்
5. சீனம்
6. வியங்கோள் வினைமுற்று

## பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி க்ரூஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதவில்லை. ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்**

- **S.** மார்க்ரொனி
  மே/பா. சகாயம்,
  7ம் பிரிவு, கோட்டகொடை,
  ஸ்பிரிங்வெளி.
- பார்த்திபன் ஷியாம்
  கடற்கரை வீதி,
  களுவாஞ்சிக்குடி - 08.
- **A.** லிசாந்தன் ஒலிவர்,
  169/1**A**, லூர்த்து அன்னை வீதி,
  பார்றோட்,
  மட்டக்களப்பு.
- **M.** சாதனா,
  கிறிஸ்ரி இல்லம்,
  தம்பிலுவில் - 01.


## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 83 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  ஜோன் ஜிதேஷன் ஜெயராஜ்,
  # 65/2, திருச்செந்தூர்
  முருகன் கோயில் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  **A.** கெனிஷா,
  169/1**A**, லூர்த்து அன்னை வீதி,
  பார்றோட்,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  **E.** சம்றோன்
  எல்லை வீதி,
  பெரியகல்லாறு - 01,
  கல்லாறு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org